பக்கங்கள்: 12

விலை: 20 ரூபா

இது ரகசியம் அல்ல!

"தற்கொலைத் தாக்குதல் நடத்திய சஹ்ரான் ஹாசீம், அவரது சகோதரர் றில்வான் போன்றோர் பெரிய அளவில் – எண்ணிக்கையில் – வெடிகுண்டுகளைத் தயாரிக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர் என்று பாதுகாப்பு தரப்பினருக்கு நேரத்துடன் பக்கம் 02

காலைக்கதிர்

Kālaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 வைகாசி 14 செவ்வாய்க்கிழமை 28.05.2019 கதிர் 204

வடக்கு – கிழக்கு அபிவிருத்திக்காக பனை நிதியம் நேற்று உருவாக்கம்

இந்த ஆண்டுக்கு 500 கோடி ரூபா ஒதுக்கீடு

கொழும்பு, மே 28

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு – கிழக்கு அபிவிருத்தி செய்வதற்காக பனை நிதியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடக்கு – கிழக்கு அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக இந்த வருடத்தில் மொத்தமாக 500 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வரவு – செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட அனைத்து நிதியும் அபிவிருத்தி வேலைத்திட்டத்துக்காக உரிய வகையில் செலவு செய்யப்படுகின்றது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பக்கம் 11

அவசரகாலச் சட்டம் விரைவில் நீக்கம்



இராஜதந்திரிகளிடம் உறுதியளித்தார் மைத்திரி

கொழும்பு, மே 28

அவசரகாலச் சட்டம் விரைவில் நீக்கப்படுமென நேற்று வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் உறுதியளித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

பக்கம் 11

வியாழேந்திரன் வெளிநடப்பு

மட்டக்களப்பு, மே 28

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் வெளிநடப்புச் செய்துள்ளார். பக்கம் 11

22 ஆயிரம் பட்டதாரிகள் விரைவில் அரச சேவையில்

பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, மே 28

நாட்டில் 22 ஆயிரம் பட்டதாரிகள் விரைவில் அரச சேவைக்குள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று பிரதமர் ரணில் விக்கிரம பக்கம் 11

செம்மலைப் பிள்ளையாருக்கு புத்த பிக்கு பொருத்திய சி.சி.ரி.வியை அகற்ற உத்தரவு

முல்லைத்தீவு நீதிமன்றம் வழங்கியது

முல்லைத்தீவு, மே 28

முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் அத்துமீறி விகாரை அமைத்துள்ள பௌத்த பிக்கு வால்பிள்ளையார் ஆலயத்துக்கு மட்டும் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி.வி. பக்கம் 02

தமிழக இந்துமக்கள் கட்சியினர் முள்ளிவாய்க்காலில் அஞ்சலி!

முல்லைத்தீவு, மே 28

தமிழக இந்து மக்கள் கட்சியின் தலைவர் அர்ஜுன் சம்பத் உள்ளிட்டவர்கள் முல்லைத்தீவுக்குப் பயணம் மேற்கொண்டு பல இடங்களுக்குச் சென்றனர். முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் அவர்கள் அஞ்சலி பக்கம் 11

சட்டத்தரணி வீட்டில் கஞ்சா மீட்டனர் இராணுவத்தினர்!

மட்டக்களப்பு, மே 28

மட்டக்களப்பு, ஏறாவூர் பகுதியில் சட்டத்தரணி ஒருவரின் மனைவியை இராணுவத்தினர் கஞ்சாவுடன் கைது செய்து தங்களிடம் ஒப்படைத்தனர் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். பக்கம் 11

மைத்திரி பணித்தாலும் வடக்கில் கெடுபிடிகள் குறைந்தபாடில்லை

யாழ்ப்பாணம், மே 28

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரின் கெடுபிடிகள் குறைக்க இராணுவத் தளபதிக்கு ஜனாதிபதி மைத்திரிபால உத்தரவிட்டபோதிலும் சோதனைகள் எவையும் குறைக்கப்படவில்லை என பக்கம் 02

புர்காவைக் களைய மறுத்த பெண் மருத்துவத் தொழிலைத் துறந்தார்!

கொழும்பு, மே 28

ஹோமாகம தேசிய வைத்தியசாலையில் பணிபுரியும் இளம்பெண் முஸ்லிம் வைத்தியர் ஒருவர், புர்காவைக் கழற்ற மறுத்து வைத்திய தொழிலில் இருந்து விலகுகிறார் எனக் கடிதம் அனுப்பியுள்ளார். பக்கம் 11

பதவியிலிருந்து விலகிவிடுகின்றேன் முடிந்தால் வெளியேற்றுங்கள்!

சவால் விடுகிறார் அமைச்சர் ரிஷாத்

கொழும்பு, மே 28

எந்தக் குற்றமும் செய்யாத என்னைப் பதவிவிலகுமாறு கூறுவதை ஏற்க நான் தயாரில்லை. எனக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்ள நான் தயார் என அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் பக்கம் 11

அமெரிக்கப் படைகள் இலங்கையில் இல்லை!

கூறுகிறார் இராணுவப் பேச்சாளர்

கொழும்பு, மே 28

அமெரிக்கப் படைகள் இலங்கைக்குள் களமிறக்கப்படவில்லை என இராணுவ ஊடகப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் ரொஷான் செனவிரத்ன தெரிவித்தார். பக்கம் 02

செம்மலைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கமெராக்களை உடனடியாக அகற்றுமாறு முல்லைத்தீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு முல்லைத்தீவு நீதிமன்ற நீதவான் எஸ்.லெனின்குமார் உத்தரவிட்டுள்ளார் .

நேற்று முன்தினம் நீதிமன்ற தீர்ப்புக்குஉட்பட்டுவீதிஅபிவிருத்தி அதிகாரசபைமற்றும்கரைதுறைப் பற்றுபிரதேசசபைஆகியவற்றின் அனுமதிகளுடன் பிள்ளையார் ஆலயத்தின் இரு மருங்கிலும் வீதி ஓரம் பெயர்ப்பலகையை நடச்சென்ற நீராவியடிப் பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினரும், செம்மலைக் கிராம மக்களும் பிக்குவாலும் பொலிஸாராலும் தடுக்கப்பட்டனர்.

பிக்குவின் முறைப்பாட்டுக்கு அமைவாக உடனடியாகச் சம்பவ இடத்துக்கு வந்த முல்லைத்தீவுப் பொலிஸார் ஆலய அபிவிருத்தி வேலைகளுக்காகவும் வழிபாட்டுக்காகவும் வந்த மக்களை நிலத்தில் அமர்த்தி விசாரணைகளை செய்து பதிவுகளை மேற்கொண்டு குற்றவாளிகளைப் போல நடத்தியிருந்தனர் .

இந்தச் சம்பவங்களையடுத்து நீராவியடி பிள்ளையார் ஆலயத்தைச் சேர்ந்தவர்களால் நகர்த்தல் பத்திரம் ஒன்று தாக்கல் செய்யப்பட்டு நேற்று முல்லைத்தீவு மாவட்டநீதிமன்றில் இந்தவழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது .

மாவட்ட நீதிபதி எஸ்.லெனின் குமார் முன்னிலையில் இடம் பெற்ற இந்த வழக்கு விசாரணையில்சிரேஷ்டசட்டத்தரணிஅன்ரன் புனிதநாயகம் தலைமையில் முல்லைத்தீவுமாவட்டசட்டத்தரணிகள் சங்கத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகளும்ஆஜராகியிருந்தனர்.

நேற்று முன்தினம் வழிபாடுகளுக்கும் அபிவிருத்தி வேலைகளுக்கும்சென்றநீராவியடிபிள்ளையார் ஆலய நிர்வாகத்தினருக்குபொலிஸாரினாலும்பௌத்த பிக்குதரப்பினராலும் இடையூறு ஏற்பட்டமைதொடர்பில்பத்திரிகைகளில் வெளியான செய்தியை ஆதாரம் காட்டி சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் மன்றின்கவனத்துக்குக்கொண்டு வந்தார்.

இதனையடுத்து உடனடியாக முல்லைத்தீவுபொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரியை மன்றுக்கு அழைத்த நீதிபதி, வழக்கின் தீர்ப்பின்படி பௌத்த பிக்குவால் மாற்றம் செய்யப்பட்ட கணதேவி தேவாலயம் என்ற பெயரை ஏற்கனவே இருந்ததை போன்று நீராவியடி பிள்ளையார் ஆலயம் என மாற்றம் செய்யுமாறு பொலிஸாருக்கு கூறப்பட்டது. அது இன்னும் மாற்றம் செய்யப்படவில்லை எனவும் இரண்டு புதிய சி.சி.ரி.வி. கமெராக்கள் பொருத்தப்பட்டுள்ளமை தொடர்பிலும் வினவினார் .

இதன்போது உடனேயே அந்தக் கமெராக்களை அகற்றுவதாகவும், பெயரினையும்மாற்றுவதாகவும் பொலிஸ் பொறுப்பதிகாரிமன்றில்தெரிவித்தமையைத் தொடர்ந்து உடன் அந்த வேலைகளைச் செய்யுமாறும் –

இரண்டுதரப்பினரையும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள நீதிமன்றின்தீர்ப்பைமதித்துச்செயற்படுமாறும் –

அமைதிக்கு பங்கம் ஏற்படாதவாறு செயற்படுமாறும் நீதிமன்றம் கட்டளையிட்டது .

இதனை இனியும் மீறுவோர் நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டுக்கு உள்ளாக நேரிடும் எனவும் மன்று எச்சரித்தது. (ஐ)

முல்லைத்தீவு ஊடகவியலாளர் குமணனுக்கு பொலிஸ் மிரட்டல்

முல்லைத்தீவு, மே 28

முல்லைத்தீவு ஊடகவியலாளர் குமணன் மீது தாக்குதல் நடத்தி இனவாத கருத்துக்களாலும் தகாத வார்த்தைகளாலும் கொக்கிளாய்மற்றும்முல்லைத்தீவு பொலிஸ் பொறுப்பதிகாரிகள் பேசி அச்சுறுத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.

செம்மலை பிள்ளையார் கோவில் பெயர் பலகை நீக்கப்பட்டமையை கண்டித்து, பெயர் பலகையை மீள நாட்ட நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை ஊரவர்கள் சென்றபோது, அங்கு அடாத்தாக விகாரை அமைத்து தங்கியுள்ள பிக்குவின் அழைப்பில் சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் ஊரவர்கள் அனைவரையும்நிலத்தில்அமர்த்தி அவர்களின் பதிவுகளை மேற்கொண்டனர்.

அது தொடர்பில் செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்களை படம் எடுக்க விடாது தடுத்த பொலிஸார், ஊடகவியலாளர்களைபடம்எடுத்துஅச்சுறுத்தினார்கள். அதேவேளைஅப்பகுதியில்பிக்குசி.சி.ரி.வி. கமராக்களையும் பொருத்தி உள்ளார். அது தொடர்பில்ஊடகங்களில்செய்திகள் வெளியாகி இருந்தன. இந்தச் செய்தியை வெளிக்கொண்டு வந்தஊடகவியலாளர்களில்குமணனும் ஒருவர்.

இந்நிலையில் சம்பவங்கள் தொடர்பில் நேற்றுச் சட்டத்தரணிகள் நீதிவானின் கவனத்திற்கு கொண்டு சென்றனர். அதனைத் தொடர்ந்து நீதிவான் சி.சி.ரி.வி. கமராக்களை அகற்றநடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். நீதிமன்ற உத்தரவையடுத்து குறித்த சி.சி.ரி.வி. கமராக்களை அகற்றுமாறு பிக்குவிடம் பொலிஸார் கூறிய போதிலும் பிக்கு அதற்கு உடன்படவில்லை.

இந்நிலையில்அந்தச்சம்பவங்கள் தொடர்பில் செய்தி சேகரித்துக்கொண்டிருந்த ஊடகவியலாளர்களின்பணிக்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாகப் பொலிஸார் செயற்பட்டுள்ளனர்.

அத்துடன் அவர்களை புகைப்படம் எடுக்கவிடாது , பொலிஸார் தடுத்துள்ளனர். அதன்போது ஊடகவியலாளர் குமணன் மீது தாக்குதல்மேற்கொண்டமையுடன் தமிழர்கள் தொடர்பிலும் தகாத வார்த்தைகளால்பேசி, இனவாதக் கருத்துக்களாலும்பேசியுள்ளனர்.

அதேவேளை, நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்த சென்ற பொலிஸார் பிக்குவிற்கு சார்பாகச் செயற்பட்டனர் என வும் குற்றம் சாட்டப்பட்டப்படுகின்றனர். (ஐ-07)

மைத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் கூறுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் படையினரின் கெடுபிடிகள் அதிகரித்து வருவது தொடர்பில் அண்மையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற தேசிய பாதுகாப்புச் சபை ஆலோசனைக் கூட்டத்தில் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் எம்.பியுமான டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டியிருந்தமையை யடுத்து உடனடியாக அதனைக் கவனிக்குமாறு இராணுவத் தளபதிக்கு ஜனாதிபதி மைத்திரி உத்தரவிட்டிருந்தார்.

எனினும் யாழ்ப்பாண மாவட்டம் உள்ளிட்ட வடக்கின் பல இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

பிற இடங்களில் இருந்துவரும் வாகனங்கள் மற்றும் பயணிகள் அனைவரும்தீவிரசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின்னரே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். அத்துடன் வாகனங்கள் அனைத்தும் பதியப்பட்டே பயணிக்க அனுமதிக்கப்படுகின்றன என்று மக்கள் கூறினர்.

ஜனாதிபதி பணிப்புரை விடுத்தும் இராணுவத்தின் கெடுபிடிகள் குறையவில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ஐ)

அமெரிக்கப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்குள் அமெரிக்க இராணுவம் களமிறக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவருகின்ற நிலையில் அதன் உண்மைத் தன்மை குறித்து வினவியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கைக்குள் எந்தவித சர்வதேச இராணுவப் படைகளும் களமிறக்கப்படவில்லை, குறிப்பாக அமெரிக்காவின் இராணுவப்படைகள் இலங்கைக்குள் குவிக்கப்பட்டுள்ளதாகத்தொடர்ச்சியாக கேள்வி எழுப்பப்பட்டு வருகின்றது. இதற்கு சில புகைப் படங்களும் பயன்படுத்தப்பட்டும் வருகின்றன.

எமது பாதுகாப்புப் படையினர் மாலி தீவுகளுக்கு அனுப்பப்பட வுள்ள காரணத்தினால் எமது இராணுவ வாகனங்கள் சில பரிசோதிக்கப்பட்டு வருகின்றன. இந்த வாகனங்கள் அனைத்துமே எமக்கு ஐக்கிய நாடுகள் அமைதிப்படை மூலமாக வழங்கப்பட்டவாகனங்கள். அவற்றையே நாம் பரிசோதனை செய்து தயார் படுத்தி வருகின்றோம். அந்த புகைப்படங்களை வைத்துக் கொண்டே சில வதந்திகள் பரப்பப்பட்டு வருகின்றது.

எனினும் அமெரிக்க இராணுவப் படைகளை இலங்கைக்குள் கொண்டுவரவில்லை. அவர்கள் வருவதாகக் கோரவும் இல்லை. இலங்கையில் தற்போது நிலவும் பதற்றமான நிலைமைகளை கையாள எமது முப்படையினர் மற்றும் பொலிஸ் மட்டுமே ஈடுபடுத்தப்பட்டுள்ளன. நிலைமைகளை வழமைக்கு கொண்டுவந்துள்ளோம்.

மக்கள் எந்தவித அச்சமும் இன்றி அமைதியாக வாழக்கூடிய சூழல் இன்று நிலவுகின்றது. ஆகவேபொய்யானதகவல்களை சிலர் பரப்புவதன் மூலமாக மக்களின் இயல்பு வாழ்கையை குழப்பவே முயற்சித்து வருகின்றனர். தொடர்ச்சியாக தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நாட்டின் சகல பகுதிகளிலும் முப்படையினர் குறிப்பாக இராணுவம் மற்றும் பொலிஸ் தரப்பினர் இணைந்து தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர் – என்றார். (ஐ)

செப்புத் தொழிற்சாலை விசாரணை பயங்கரவாத விசாரணைப் பிரிவிடம்

கொழும்பு, மே 28

வெல்லம்பிட்டிய செப்புத்தொழிற்சாலைதொடர்பானவிசாரணையை பதில் பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கமைய, தமது பொறுப்பின் கீழ் எடுத்துள்ளதாக பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் நேற்றுக் கொழும்பு மேலதிக நீதவான் பிரியங்க லியனகேயிடம் அறிவித்துள்ளனர்.

அந்தச் செப்புத் தொழிற்சாலை சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 10ஆவது சந்தேகநபரான அப்துல்லா எனப்படும் கருப்பையா ராஜேந்திரனை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதவான் பிரியங்க லியனகே உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தின் ஏனைய 9 சந்தேகநபர்களையும் இன்று தொடக்கம் ஜூன் மாதம் முதலாம் திகதி வரையான காலப்பகுதிக்குள் பயங்கரவாத விசாரணைப் பிரிவில் ஆஜராகி வாக்குமூலத்தைப் வழங்குமாறும் நீதிவான் இதன்போது உத்தரவிட்டுள்ளார். (ஐ)

இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல்கொடுத்தோம். எச்சரித்தோம். அவர்களோ சாப்பிட்டுக் குடித்து விட்டு 'சும்மா' இருந்துவிட்டனர். உரியநடவடிக்கைஎடுக்கவில்லை.'

– இப்படி அதிரடிப் பேட்டி ஒன்றை வழங்கியிருக்கின்றார் காத்தான்குடியைச் சேர்ந்த மௌலவி அதாஉல்லா கலீல்.

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றில் அவரது பரபரப்புப் பேட்டி பிரசுரமாகியிருக்கின்றது.

"சஹ்ரான் ஹாசீமை எனக்கு நன்கு தெரியும். அவரதுதவறான

போக்குக் காரணமாக அவருடன் முரண்பட்டு மோதியிருக்கின்றேன். நான் இருப்பதை அறிந்தால் அவர் அந்த இடத்துக்கு வராமல் தவிர்ப்பார். இடம் மாறி விடுவார். பள்ளிவாசலுக்குள் தர்க்கப்பட்டிருக்கிறோம். மாறி மாறி தாக்கியிருக்கிறோம்.

"இந்தப் பயங்கரவாதிகள் 250 பொது மக்களை மட்டும் கொல்லவில்லை. 25 லட்சம் முஸ்லிம்களின்நற்பெயரையும் சேர்த்துக் கொன்றுள்ளார்கள்.

"அவர்களுக்கும் எங்களுக்கும் இடையில்தொழுகை முறைகளில் வேறுபாடு உண்டு. இந்த வழிபாட்டுமுறைமை தொடர்பில் நாங்கள் அவர்களுடன் மோதி வந்திருக்கிறோம். ஆனால்அவர்கள்குண்டுகளைநாடியதும்நாம் அவர்களுக்கு எதிராக வீதிகளில் இறங்கினோம்.

2017 ஓகஸ்டில்காத்தான்குடியில் 1500 பேர் வீதிக்கு இறங்கி எதிர்ப்பைக் காட்டினோம். காத்தான்குடி நகர மேயர் அஸ்வர் இது பற்றி நன்கு அறிவார். அவரிடம் கேளுங்கள்.

"இந்த நபர் நாட்டை எரிக்கப் போகிறார். அவர்ஒருபயங்கரவாதி. இது குறித்து போஸ்டர்களைக் கூட ஒட்டினோம். அவரைக்கைதுசெய்யுமாறு கோரி ஆண்களும் பெண்களுமான வீதிக்கு இறங்கினோம். ஆனால்யாரும்எம்மை செவிமடுக்கவில்லை.

"காத்தான்குடிநகரமேயருக்கு முன்னால் வைத்து தேசியப் புலனாய்வுப் பிரிவின்புலனாய்வு அதிகாரிக்கு இந்த ஆபத்தான நிலைமை குறித்துத் தெளிவாக விளக்கினேன்.

"புலனாய்வுத் துறைகளுக்கு இது குறித்து நேரத்துடனேயே அறிவித்தோம். ஆனால்உருப்படியாக எதுவும் நடக்கவில்லை.

"என்ன நடக்கப் போகின்றது என்பது எல்லாம் முஸ்லிம் தலைவர்களுக்கும்கூட நன்குதெரிந்தே இருந்தன. எந்த முஸ்லிம் தலைவர்களுக்கும் நாம் இது குறித்து அறிவிக்க வேண்டிய தேவையே இருக்கவில்லை. ஏனென்றால் முற்கூட்டியே அவர்கள் ஒவ்வொருக்கும் இது தெரிந்து இருந்தது. இதற்கு எதிராக ஆயிரத்து ஐந்நூறு பேர் ஒன்றாக வீதிக்கு இறங்கிப் போராடிய நிலையில் அது குறித்து முஸ்லிம் தலைவர்களுக்குப் புதிதாக அறிவிக்க என்ன தேவை இருக்கின்றது?

"இது குறித்து இறுதியாக நிதிக் குற்றவியல் விசாரணைக்கான பொலிஸ் பிரிவுக்குக் கூட தெரிவித்தோம்.

"காத்தான்குடியில் அவர்களின் பயிற்சி முகாம் இருந்தது குறித்து காத்தான்குடிப் பொலிஸுக்குக் கூட சென்று கூறியிருந்தோம்.

"நாங்கள் நேரத்துடன் இது குறித்துக் கூறி, 'வாங்கள் அவர்களைப் பிடிப்போம்' – என்றோம். ஆனால் யாரும் வரவில்லை.

"அரசும்அதிகாரிகளும்தங்கள் கடமைகளைச் செய்யவில்லை. குண்டு வெடிக்கும் வரைக் காத்திருந்து விட்டு இப்போதுதான் தாக்குகிறார்கள்.

"நேரத்துடன் ஜனாதிபதி, பிரதமர் போன்றோருக்கு எழுத்தில் இவை பற்றித் தெரிவித்திருந்தேன். புலனாய்வுப் பிரிவுக்கும் அறிவித்திருந்தோம்.

"2019 பெப்ரவரியில் குண்டுகளைத் தயாரித்த போது அது வெடித்ததில் றில்வானின் ஒரு கண் பார்வை போயிற்று. அவர் காயமடைந்தார். காத்தான்குடி பொலிஸாருக்கும் அது நன்கு தெரியும். கஸ்தூரி என்ற அதிகாரிதான் இதை அறிந்தவர்.

"சஹ்ரானின் நகர்வு பற்றி பொலிஸாருக்குக் கூறிக் கொண்டிருந்தோம். அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்காமைதான் எமக்குக் கவலை அளிக்கின்றது. இப்போது அவர்கள் எங்களைக் குற்றம் சுமத்துகின்றார்கள்."

– இது மௌலவி கலீலின் பேட்டியின் சாராம்சம். அவர் கூறுகின்ற விடயங்கள் உண்மையாயின், இவ்விவகாரத்துக்குள் ஆழமான மேலும் பல அம்சங்கள் புதையுண்டு கிடக்கின்றன என நான் நம்புகிறேன்.

கிழக்கில் கடமையில் இருந்த பாதுகாப்பு அதிகாரிகள் பலர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழான தடுப்புக்காவல் உத்தரவுகளைப் பெற வேண்டிய நிலைக்குத் தள்ளப்படலாம்.

உண்மையான – நேர்மையான – பக்கச்சார்பற்ற – விசாரணைகள் நடந்தால் மட்டுமே அது சாத்தியம். நடக்குமா?

- மின்னல் -

குருநாகல் வைத்தியசாலையில் குவிந்து வரும் முறைப்பாடுகள்

முஸ்லிம் மருத்துவருக்கு எதிராக

கொழும்பு, மே 28

குருநாகல் வைத்தியசாலையின் மகப்பேற்றுப் பிரிவில் பணியாற்றிய வைத்தியர் சிஹாப்டின் மொஹமட் ஷாபிக்கு எதிராகப் பல பெண்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

இதுவரை சுமார் 16 பெண்கள் அவர் மீது முறைப்பாடு செய்துள்ளனர் என வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

முறையற்ற விதத்தில் சிங்களப் பெண்களுக்குக் கருத்தடைச் சிகிச்சை செய்தார் என அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

குருநாகல், வாரியபொல, கலீவெல, தம்புள்ள, மவதகம, மெல்சிரிபுர பகுதிகளைச் சேர்ந்தவர்களே முறைப்பாடு பதிவு செய்துள்ளனர். (ஐ)

இரணைதீவு இறங்குதுறை புனரமைப்பு

கிளிநொச்சி, மே 28

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட இரணைதீவுக்கான இறங்குதுறை புனரமைக்கப்படுகின்றது.

இதற்கானகூட்டுமானப்பொருள்கள் இரணைமாதா நகரிலிருந்து படகு மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றன. பிரதேச மக்களின்நன்மைகருதிகுடிதண்ணீர்க் கிணறு புனரமைத்தல், நீர்த்தாங்கி அமைத்தல், குடிதண்ணீர் விநியோகக் குழாய்கள் பொருத்தும் வேலைகளும் இடம் பெறுகின்றன.

இதற்காக அரசு ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் உதவியுடன், சுமார் 2 கோடியே 80 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கியுள்ளது.

பிவித்துருவின் பிரதித் தலைவர் வெளிநாடு செல்வதற்குத் தடை!

கொழும்பு, மே 28

பிவித்துரு ஹெல உறுமயவின் பிரதித் தலைவர் மதுமாதவ அரவிந்த உட்பட 3 பேர் வெளிநாடுசெல்ல மினுவாங்கொடை நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

மினுவாங்கொடையில் இடம்பெற்ற வன்முறைகளுடன் அவர்கள் தொடர்புபட்டனரா என்பது பற்றிய விசாரணைகள் நடைபெறுகின்றன. (ஐ)

வீட்டுச் சிறையிலாவது ரிஷாத்தை வையுங்கள்!

மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை

கொழும்பு, மே 28

பயங்கரவாதி சஹ்ரான், 2015 ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு எதிராக செயற்பட்டவர் எனத் தெரிவித்துள்ளஎதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் ரிஷாத் பதியுதீனை வீட்டுச்சிறையிலாவது வைத்து விசாரிக்கவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

லங்காதீப பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலிலேயே இதனைக் கூறியுள்ளார்.

தனது ஆட்சிக்காலத்தில்சிறுபான்மையினர் பாதுகாப்பாக இருந்தனர் என்றும், அளுத்கம மற்றும் பேருவளை கலவரங்கள் அரசியல்ரீதியானவை. அதையார் செய்தார்கள் என்று தெரியும் எனவும் மஹிந்த கூறினார்.

சஹ்ரான் தனக்கு எதிராகவும், மைத்திரிக்கு ஆதரவாகவும் செயற்பட்டார் என்றும், சஹ்ரான் குழு தனது ஆட்சிக் காலத்தில் உருவாகத் தொடங்கியதை ஏற்றுக்கொண்ட மஹிந்த, அவர்களில் சிலருக்கு புலனாய்வுத்துறை பணம் வழங்கியதையும் ஏற்றுக்கொண்டார்.

எனினும், அவர்கள் சஹ்ரான் குழுவுக்குள் ஊடுருவிய புலனாய்வுத் துறை நபர்களே தவிர, உண்மையான சஹ்ரான் குழுவினர் அல்லவென்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய நிலையில் அனைத்து குற்றங்களையும் ரிஷாத்தின் தலையில் சுமத்திவிட்டு மற்றவர்கள் தப்பிக்க முயல்கின்றனர் எனவும், ரிஷாத் அரசின் ஒரு அங்கம் என்றும் மஹிந்த கூறினார்.

ரிஷாத்தின் மீதான குற்றச்சாட்டுக்கள் உண்மை போலத் தெரிகின்றன என்றும் ஆனால் விசாரணை இடம்பெற வில்லையென்றும் தெரிவித்த அவர், குறைந்தபட்சம் வீட்டுச் சிறையிலாவது வைத்து அவரை விசாரிக்க வேண்டுமெனவும் சுட்டிக்காட்டினார். (ஐ)

மக்களை மிரட்டியவர் துப்பாக்கியுடன் கைது

வவுனியா, மே 28

வவுனியா, நெளுக்குளம் சாம்பல்தோட்டம் சந்திப்பகுதியில் நேற்று முன் தினம் மதுபோதையில் கிராம மக்களை அச்சுறுத்திய நபர் ஒருவரை இடியன் துப்பாக்கியுடன் கைது செய்துள்ளார்கள் எனப் பொலிஸார் தெரி வித்தனர்.

வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுரா அபேய விக்கிரம தலைமையின் கீழ் செயற்படும் போதை ஒழிப்புப்பிரிவினர் மேற்கொண்டநடவடிக்கையின்போது நபர் ஒருவர் மது போதையில் கிராம மக்களை அச்சுறுத்தி வருகிறார் எனத் தகவல் கிடைத்தது.

சாம்பல்தோட்டம் டிஸ்கோ சந்திப் பகுதியில் அந்த நபரின் வீட்டுக்குச் சென்ற பொலிஸாரைக் கண்டதும் அவர் தப்பி ஓடியுள்ளார்.

துரத்திச் சென்ற பொலிஸார் அவரைக் கைது செய்த போது இடியன் துப்பாக்கி ஒன் றைத் தன்வசம் வைத்திருந்தமை பொலிஸாருக்குத் தெரிய வந்தது.

அவர் இடியன் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டார். அந்தப் பகுதியைச் 33 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். அவரிடம் மேலதிக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

(ஐ – 100)

சங்கிலியன் மன்னனுக்கு நந்திக்கடலில் தர்ப்பணம்

முல்லைத்தீவு, மே 28

யாழ்ப்பாண இராச்சியத்தின் இறுதித் தமிழ் மன்னன் சங்கிலியன் மன்னனின் 400 ஆவது சிரார்த்த தினமான நேற்றுக் காலை முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய முன்றிலில் உள்ள நந்திக்கடலில் தர்ப்பணம் கொடுக்கப்பட்டுள்ளது.

சங்கிலியன் மன்னன் சிரார்த்த தினம் முல்லைத்தீவு மாவட்ட சிவசேனை அமைப்பின் ஏற்பாட்டில் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய முன்றலில் நினைவு கூரப்பட்டது. இதன்போது தர்ப்பணம் செய்யப்பட்டு பிண்டம் நந்திக்கடலில் கரைக்கப்பட்டது. (ஐ)

கீரிமலை புனித தீர்த்தத்தில் சங்கிலியனுக்கு கிரியைகள்

யாழ்ப்பாணம், மே 28

சங்கிலியன் மன்னனுக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் தர்ப்பணக் கிரியைகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநரின் இணைப்பு அதிகாரி, வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, தமிழ்நாடு இந்து மக்கள் கட்சித் தலைவர் அர்ஜூன் சம்பத், பாரத ஜனதா கட்சியின் முன்னணி செயற் பாட்டாளர்கள் அருண் உபாத்தியா, தீக்ஸி கௌசிக், மறவன் புலவு சச்சிதானந்தம் மற்றும் செயற்குழுஉறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்

இதேவேளை சங்கிலிய மன்னனுக்கு 400 ஆவது நினைவு தினத்தை ஒட்டி தர்ப்பணம் வழங்கும் நிகழ்வு திருகோணமலை கன்னியா புனித தீர்த்தத்தில் நடைபெற்றது. இதனை அகரம் மக்கள் மய்யம் மற்றும் தென்கயிலை ஆதீனம் ஆகியன முன்னெடுத்திருந்தன.

(ஐ – 07)

கிளிநொச்சி பாடசாலைகளில் நேற்று விசேட சோதனைகள்

கிளிநொச்சி, மே 28

கிளிநொச்சி மகா வித்தியாலயம் உள்ளிட்ட பிரபல பாடசாலைகளில் விசேட சோதனைகள் நேற்று நடத்தப்பட்டன.

பொலிஸாரும் படையினரும் இணைந்து இந்தச் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் இவ்வாறு சோதனைகள் முன்னெடுக்கப்பட்டமையுடன், பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

பாடசாலை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் முப்படையினர் தீவிர சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதேவேளை வழமைபோன்று பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட பாடசாலைச் சமூகத்தினரின் பொதிகளும் சோதனையிடப்பட்டன.

கடந்த 21 ஆம் திகதி தாக்குதலின் பின்னர் பாடசாலைகளின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு வந்தது. எனினும் கெடுபிடிகள் படிப்படியாக குறைவடைந்து வந்த நிலையிலேயே நேற்றுத் திடீர்ச் சோதனை மேற்கொள்ளப்பட்டது. (ஐ)

வேலை வாய்ப்பு

ஐஸ்கிறீம் உற்பத்தி நிறுவனமொன்றிற்கு வேலையாட்கள் தேவை. ஆண், பெண் இருபாலரும் இணைத்துக் கொள்ளப்படுவர். நாள் சம்பளம் 1510/–, Night Shift. வயதெல்லை 18 – 60.

தொடர்புகளுக்கு:
077 786 8174, 076 063 3946

வேலை வாய்ப்பு

Medical Sales Rep – யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா
வயதெல்லை 18 – 55. சம்பளம் 35,000/–
கமிஷன் 20,000/– – 45,000/–
வாகன, தொலைபேசி,
உணவுக் கொடுப்பனவு உண்டு.

தொடர்புகளுக்கு: 076 063 4411

நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

ஜனநாயகக் கட்டமைப்பாக கூட்டமைப்பின் தீர்மானம்!

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதம் நீடிக்கும் பிரேரணையைத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் எதிர்த்து வாக்களித்தமை சில சர்ச்சைகளை – குழப்பகரமான பிரதிபலிப்புகளை– தோற்றுவித்திருக்கின்றமை என்பது உண்மையே.

ஈஸ்டர் ஞாயிறன்று நாட்டில் பல இடங்களிலும் நடத்தப்பட்ட தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை அடுத்து உடனடியாக அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

அவசரகாலச்சட்டவிதிகள்வர்த்தமானியில்அறிவிக்கப்படாத நிலையில், பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அவசர காலம் பிரகடனப்படுத்தப்பட்டபோது அதனைத் தமிழ்ப்பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் எதிர்க்கவில்லை. தமிழ்ப் பிரதிநிதிகள் மட்டுமல்லர், எவருமே எதிர்க்கவில்லை.

இஸ்லாமிய பயங்கரவாதத்தினால் மிக மோசமான பேரழிவுகளை நாடு சந்தித்து, அந்தப் பேரதிர்ச்சியில் மூழ்கியிருந்த அந்தச் சமயத்தில் அந்த நெருக்கடியை விரைந்து கையாளும் அவசர நடவடிக்கையாக நாட்டில் அவசர காலநிலைமையை அரசு பிரகடனப்படுத்தியது. அதை எதிர்க்கக் கூடிய அரசியல் சூழ்நிலை – களநிலைமை – அன்று இருக்கவில்லை.

ஆனால், அன்று அதை வெளிப்படையாகக் கூட்டமைப்பு எதிர்க்கவில்லை என்பதற்காக அதனைத் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் முன்னாள் முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செ.கஜேந்திரன் போன்றோர் கடுமையாகக் கண்டித்தனர். நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் கிட்டாத தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்தோர், நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் கொண்ட கூட்டமைப்பின் செயற்பாட்டை நேரெதிராக இப்படி விமர்சனம் செய்தமை ஆச்சரியப்படத்தக்கதல்ல.

இந்த மூவரில் சுரேஷ் பிறேமசந்திரனின் கட்சியின் செயலாளர் நாயகம் சிவசக்தி ஆனந்தன் நாடாளுமன்ற உறுப்பினர்தான். கூட்டமைப்பின் சார்பில் தெரிவானவர்தான். ஆனால் அவரும் கூட முதல் தடவையாக அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு அதுபற்றிய அறிவித்தல் சபைக்கு வந்தபோது அதனை எதிர்க்கவில்லை.மற்றைய இருவரின் – நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் செ.கஜேந்திரன் ஆகியோரின் – கட்சிகளுக்கு நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் இருந்திருந்தால் அவர்களும் அப்போது அவசரகாலச் சட்ட ஏற்பாடுகளை எதிர்க்காமல் விட்டிருப்பரோ என்னவோ...?

எனினும், இரண்டாவது மாதத்துக்கு அவசர காலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை நாடாளுமன்றுக்கு வந்தபோது அங்கு பிரசன்னமாகியிருந்த எட்டு கூட்டமைப்பு எம்.பிக்களும் அதனை எதிர்த்து வாக்களித்திருந்தனர்.

அவசரகாலச் சட்டத்தை எதிர்த்துப் பேசிய ஜே.வி.பியினர் கூட வாக்களிப்பு நடந்த போது சபையில் இருக்கவில்லை.

முஸ்லிம் தீவிரவாதத்துக்கு எதிரான தீவிர நடவடிக்கைகளுக்கு என்ற பெயரிலேயே – நோக்கத்திலேயே – இந்த அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டு நீடிக்கப்படுகின்றது.

எடுத்த எடுப்பிலேயே அதன் தீவிர கரங்கள் முஸ்லிம்கள் மீதே உடன் பாய்ந்தன. இன்றைய நிலையில் அது இயல்பானதும், தவிர்க்க முடியாததும்தான். இவ்வாறு அவசரகாலச் சட்டங்களும் ஏனைய நெருக்குவார ஒழுக்க விதிகளும் முஸ்லிம்கள் மீது தம் கைவரிசையைக் காட்டுகின்றமை குறித்து முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் பல மட்டங்களிலும் குரல் எழுப்பி வருகின்றனர். ஜனாதிபதி, பிரதமர் உட்பட அரச தலைவர்களைச் சந்தித்து முறையிட்டு வருகின்றனர்.

ஆனால், அவர்கள் எவருமே இந்த அவசரகாலச் சட்ட விதிகளுக்கு எதிராக வாக்களிக்கவில்லை. அரசுத் தரப்பாலும், எதிர்த்தரப்பாலும் கணிசமான முஸ்லிம் எம்.பிக்கள் உள்ளனர். ஆனால் அவர்கள் எல்லோரும் இது விடயத்தில் அம்சடக்காக இருந்து கொண்டார்கள்.

கூட்டமைப்பினர் மட்டுமே பகிரங்கமாக வெளிப்பட்டு, இந்த அவசரகாலச் சட்ட நீடிப்பை வெளிப்படையாக எதிர்த்தனர்.

இந்த வாக்களிப்புக்கு முன்னர் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு, மாவை சேனாதிராசா தலைமையில் கூடி இது குறித்து ஆராய்ந்தது. அந்தக் கூட்டத்துக்கு பத்து எம்.பிக்களே சமுகம் தந்தனர். சம்பந்தன், சுமந்திரன் வரவில்லை.

இருந்த எம்.பிக்கள் எல்லோரும் அவசரகாலச் சட்டம் தொடர்பில் தத்தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தனர். கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான புளொட்டினதும், ரெலோவினதும் தலைவர்களான சித்தார்த்தனும், செல்வமும் கூட அவசரகாலச் சட்டத்தை எதிர்க்க வேண்டும் என்ற கருத்தையே அங்கு பிரதிபலித்திருக்கின்றனர். தொலைபேசி மூலம் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திற்கு கருத்துத் தெரிவித்த சம்பந்தன், இன்றைய நிலையில் அவசரகாலச் சட்டத்தை எதிர்ப்பது, இவ்விடயத்தில் அதீத கவனம் செலுத்தும் சர்வதேசத்துக்கு தவறான சமிக்ஞையைத் தந்து விடலாம். எனவே யோசித்து முடிவு எடுங்கள் என்று தமது கருத்தை மட்டுமே முன்வைத்தார். அதை அழுத்தமான முடிவாக முன்வைக்கவில்லை.

இதற்கு மேல் இந்த விடயத்தில் கருத்து கூற சுமந்திரன் எம்.பியும் நாட்டில் இருக்கவில்லை.

அந்தப் பின்புலத்தில்தான், கூட்டமைப்பின் எம்.பிக்களின் ஏகோபித்த விருப்பின் அடிப்படையில் அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும்பிரேரணையைஎதிர்ப்பதுஎன்றதீர்மானம்எடுக்கப்பட்டது.

சம்பந்தன், குறிப்பிட்டமை போல அந்தத் தீர்மானத்தின் பெறுபேறு சில சமயம் பாதகமான விளைவுகளை – பெறுபேறுகளைத் தந்துவிடக் கூடும். எனினும் கூட்டமைப்பு இந்த முடிவை – தீர்மானத்தை – வெளிப்படுத்தியமை மூலம் உட்கட்சி ஜனநாயகத்தை உறுதிப்படுத்தியிருப்பதாக மகிழலாம்.

சம்பந்தன், சுமந்திரன் திணிப்பதுதான் கூட்டமைப்பின் முடிவு என்று விமர்சித்தவர்கள் மூக்கின் மேல் விரலை வைக்கும் விதத்தில் கட்சிக்குள் ஜனநாயகம் தழைத்தோங்குவதை இந்தச் செயற்பாடு காட்டுகின்றது எனக் கூட்டமைப்பினர் தாராளமாக மகிழ முடியும்.

ஆலய வழிபாட்டில் சமத்துவம் கோரி தொடர் சத்தியாக்கிரகப் போராட்டம்

சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு ஆதரவு

யாழ்ப்பாணம், மே 28

வறணி வடக்கு சிமிழ் கண்ணகை அம்மன் ஆலயத்தின் உபயகாரர்களால் ஆலய வழிபாட்டில் அனைவருக்கும் சமத்துவம் வேண்டும், ஆண்டு தோறும் திருவிழா நடைபெறுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து ஆலய முன்றிலில் இன்று செவ்வாய்க்கிழமை காலை மு.ப. 9 மணி தொடக்கம் தொடர் சத்தியாக்கிரகப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இந்தப் போராட்டத்துக்கு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு தனது முழுமையான ஆதரவை வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

முப்பது வருடங்கள் வரை திருவிழா இடம்பெறாதிருந்த இவ் ஆலயத்தில், கடந்த வருடதேர் திருவிழாவின் போது, பக்தர்கள் எவரும் வடம் தொட அனுமதிக்கப்படாது ஜே.சி.பி. இயந்திரம் கொண்டு தேர் இழுக்கப்பட்டமை அனைவரும் அறிந்தது.

இந்நிலையில் இவ்வருட திருவிழாவை நடத்தாது ஆலய நிர்வாகத்தினர் நிறுத்தி வைத்துள்ளமை அனைவருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அவ் ஆலய உபயகாரர்களும், அடியவர்களும் இணைந்து கடந்த வாரம் அடையாளப் போராட்டங்களைத் தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு முன்பாக மேற்கொண்டிருந்தனர். இதில் அந்த மக்களுக்கான தீர்வு வழங்கப்படாத நிலையில், அவர்கள் தமது போராட்டத்தைத் தொடர் சத்தியாக்கிரகமாக ஆலயச் சூழலில் முன்னெடுக்கவுள்ளனர்.

எனவே, ஒட்டுமொத்த மனித சமுதாயத்திற்கே இழுக்கை ஏற்படுத்துவதான சாதியப் பாகுபாடுகளைத் தகர்த்து, ஆலய வழிபாட்டில் அடியவர்கள் அனைவரும் சமத்துவமாகக் கலந்து கொள்ளும் சூழலை உருவாக்க, அமைதி வழியில் பாடுபடும் மக்களுடன் சமூக, அரசியல், ஆன்மீக செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், மாணவர்கள், இளைஞர்கள் அனைவரும் இணைந்து செயற்பட முன்வர வேண்டும் – என்றுள்ளது. (ஐ)

சமய நல்லிணக்கம் தொடர்பில் வவுனியாவில் கலந்துரையாடல்

வவுனியா, மே 28

வவுனியாவில் சமய நல்லிணக்கம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றது.

வவுனியா நகரசபை மண்டபத்தில் மாவட்ட சர்வமதக் குழுவின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற தற்கொலை தாக்குதலையடுத்து மதங்களுக்கு இடையில் உள்ள நல்லிணக்கம் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தமேற்கொள்ள வேண்டிய வழிவகைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

இதில் இந்து, இஸ்லாம், பௌத்தம், கத்தோலிக்க மதத் தலைவர்கள், சமூக மட்டப் பிரதிநிதிகள், உள்ளூராட்சி மன்றப் பெண் உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-100)

பெரு வெற்றி பெற்ற ஸ்டாலினுக்கு அமைச்சர் ரவூப் ஹக்கீம் வாழ்த்து

கொழும்பு, மே 28

கலைஞர் மு. கருணாநிதி இல்லாத சூழ்நிலையில் தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு தலைமை தாங்கி, அதனைச் சிறப்பாக வழிநடத்தி, நடந்துமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டணி ஊடாக அமோக வெற்றிக்கு இட்டுச்சென்ற மு.க. ஸ்டாலினுக்கு உளம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறார் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தி.மு.க.வின் அபார வெற்றி குறித்து அமைச்சர் ரவூப் ஹக்கீம் அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

தாங்கள் வெற்றிபெற்றவுடனேயே எனது டுவிட்டர் தளத்தின் ஊடாக வாழ்த்தினை பதிவிட்டிருந்த போதிலும், அதுதொடர்பில்தனிப்பட்ட வாழ்த்துச் செய்தியொன்றை விடுப்பது சாலப்பொருத்தமெனக் கருதுகிறேன்.

தி.மு.க. கூட்டணி நாடாளுமன்றத் தேர்தலில் 37 தொகுதிகளில் வெற்றிவாகை சூடியுள்ள அதேவேளை, தாங்கள் எதிர்க்கட்சி தலைவராக இருக்கும் தமிழக சட்டமன்ற இடைத் தேர்தலில் 13 தொகுதிகளில் தி.மு.க. வெற்றி பெற்றிருப்பது உங்கள் தலைமைத்துவத்தின் வல்லமையை நிரூபித்துக்காட்டியுள்ளது.

கலைஞர் கருணாநிதியின் மறைவின் பின்னர், பொருத்தமான ஒருவரின் கரங்களில் கட்சி ஒப்படைக்கப்பட்டிருப்பது தற்கால தேர்தல் முடிவுகள் மூலம் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

எதிர்கால தேர்தல்களிலும் தி.மு.க. மேலும் பல வெற்றிகளைப்பெற்று ஆட்சிபீடமேறுவதற்கு இந்த வெற்றிகள் கட்டியம் கூறி நிற்கின்றன.

ஜூன் 9ஆம் திகதி சென்னையில் நடைபெறவுள்ள கலைஞரின் பிறந்தநாள் நிகழ்வில் பங்கேற்பதற்காக தமிழகம் வர எண்ணியுள்ளேன். அப்போது தங்களையும், வெற்றிபெற்ற உறுப்பினர்களையும் நேரடியாக சந்தித்துக் கலந்துரையாட ஆவலாக உள்ளேன். அதேபோன்று, தாங்கள் இலங்கைக்கு நல்லெண்ண விஜயமொன்றை மேற்கொள்ள வேண்டுமெனவும் அழைப்பு விடுக்கிறேன்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் தி.மு.க. கூட்டணியில் இராமநாதபுரம் தொகுதியில் வெற்றிபெற்ற கே. நவாஸ்கனிக்கும் உங்களின் தலைமைத்துவம் உந்துசக்தியாக இருந்ததாக அறிந்து மகிழ்ச்சியடைகிறேன்.

அத்துடன், தமிழக முஸ்லிம்களையும் வாஞ்சையுடன் அரவணைத்துச் செல்லும் தங்களது மனப்பான்மை மெச்சத்தக்கது.- என்றுள்ளது. (ஐ)

நாளை

29.05.2019
புதன்கிழமை

நட்சத்திரம்: சித்தம் மு.இ. 8.52 வரை
திதி : தசமி பி.ப. 2.45 வரை
இராகுகாலம் : 11.52 – 1.22
சுப நேரம்: 4.22 – 5.52

‘சோபா’வினால் இலங்கையின் இறைமைக்குப் பாதிப்பு வராது

கூறுகின்றார் அமெ. தூதுவர் அலைனா

கொழும்பு, மே 28

முன்மொழியப்பட்டுள்ள ‘சோபா’ எனப்படும் படைகளின் நிலை உடன்பாட்டினால் இலங்கையின் இறைமைக்கு எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படாது என்று அமெரிக்கத் தூதுவர் அலைனா ரெப் லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் கையெழுத்திடுவதற்கு முன் மொழியப்பட்டுள்ள சோபா உடன்பாடு, இராணுவப் பயிற்சி மற்றும் ஒத்துழைப்பு உள்ளிட்ட விடயங்களுடனேயே தொடர்புடையது. இதனால் இலங்கையின் இறைமைக்கு எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படாது.

இந்த உடன்பாடு இன்னமும் கையெழுத்திடப்படவில்லை. இரண்டு நாடுகளும் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றன. இரு நாடுகளும் உடன்பாட்டுக்கு வந்தால், அது இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

இரு நாடுகளுக்கும் இடையே இராணுவப் பயிற்சி மற்றும் ஒத்துழைப்பு நடக்கும் முறை தொடர்பாக உடன்பாட்டின் உட்பிரிவுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

அமெரிக்கப் படைகள் இலங்கைக்கு வருகை தருவது தொடர்பாக, இலங்கை அரசு மற்றும் இராணுவத்துடன் கலந்து ரையாடப்படும்.

1995ஆம் ஆண்டு இரண்டு நாடுகளும் செய்து கொண்ட உடன்பாடு தற்போது காலாவதி ஆகிவிட்டது. அது நவீன காலத்துக்கு ஏற்ப திருத்தப்பட வேண்டியுள்ளது.

எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், வெளிப்படையாகக் கலந்துரையாடி இணக்கம் காணப்படும். உடன்பாடு விடயத்தில் இருதரப்புகளுக்கும் சரியான புரிதல் இருந்தால், பிரச்சினைகளைக் குறைக்க முடியும்.

வெளிப்படைத்தன்மையுடன் உடன் பாட்டை எட்ட முடியும் என்று இரண்டு நாடுகளின் அரசுகளும் நம்பிக்கை

கொண்டுள்ளன.

இந்தோ – பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்கா பல்வேறு நாடுகளுடன், நெருங்கிய ஒத்துழைப்பைக் கட்டியெழுப்புவது உள்ளிட்ட பல்வேறு உடன் பாடுகளை செய்திருக்கிறது.

இந்த உடன்பாடுகள் ஒருபோதும் அந்த நாடுகளின் இறைமைக்கு அச் சுறுத்தலாகவோ தலையீடுகளைச் செய்வதாகவோ இருந்ததில்லை.

இலங்கை, அமெரிக்க ஆயுதப் படைகளுக்கிடையில் வேறுபாடுகள் உள் ளன. இலங்கைப் படைகளின் செயற் பாடுகள் ஒரு தனி நாட்டுக்குள்ளேயே வரையறுக்கப்பட்டுள்ளன. ஆனால், அமெரிக்கப் படைகள் உலகின் பல பகுதி களில் உள்ளன.

அமெரிக்கப் படைகள் பயிற்சிகளுக் காக இலங்கைக்கு வருவதானால், உடன்பாட்டு விதிமுறைகளுக்கு அமை வாக மட்டுமே செயற்பட முடியும்.

அண்மைக் காலத்தில் அடிப்படை வாதக் குழுக்கள் பல்வேறு நாடுகளின துமும் எதிர்காலத்துக்கும் பொதுவான அச்சுறுத்தலாக மாறியுள்ளன.

இத்தகைய குழுக்களினால் பாதிக் கப்பட்ட எல்லா நாடுகளுக்கும் அமெ ரிக்கா உதவியுள்ளது – என்றார். (ஐ)

சுற்றிவளைப்பில் 23 பேர் சிக்கினர்

கொழும்பு, மே 28

கொழும்பு – நாரஹேன்பிட்டிய பகுதியில் இரா ணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து நேற்று முன் தினம் நடத்திய தேடுதலில் – பெண் ஒருவர் உள்ளிட்ட 23 சந்தேகநபர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 7 மணி தொடக்கம், பிற்பகல் 3 மணிவரை இந்தத் தேடுதல்கள் நடத் தப்பட்டன.

இந்தத் தேடுதல்களின்போது, 15 கிலோ வெடிம ருந்துகள், ஆறு காட்டுக் கத்திகள், இராணுவத் தொப்பிகள், 14 துப்பாக்கி ரவைகள், 29 அலை பேசிகள், பல தொடர்பாடல் கருவிகள், மற்றும் போதைப் பொருள்கள் உள்ளிட்டவை ஐந்து வீடு களில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, அனுராதபுரத்தில் நேற்று முன் தினம் நடத்தப்பட்ட தேடுதல் ஒன்றின்போது, தேசிய தவ்ஹீத் ஜமாத் அமைப்பின், இரண்டு உறுப் பினர்கள், சி – 4 வெடிமருந்துடன் கைது செய்யப் பட்டுள்ளனர்.

அனுராதபுரம் – மத்துகம பகுதியில் உள்ள இஸ்லாமிய மதப் பாலர் பாடசாலை ஒன்றில் இரா ணுவத்தினர் நேற்று முன்தினம் தேடுதல் நடத்தி னர்.

அங்கிருந்து, 168 கிராம் சி – 4 வெடிமருந்து, டெற்றனேற்றர்கள் மற்றும் இஸ்லாமிய அடிப்ப டைவாதப் பரப்புரை வெளியீடுகள் கைப்பற்றப் பட்டன. நிலவிரிப்புக்குக் கீழ் வெடிமருந்து பதுக்கி வைக்கப்பட்டிருந்தது.

இந்தச்சம்பவம்தொடர்பாக, பாலர்பாடசாலைக்கு பொறுப்பானவரும், மற்றொருவரும் கைது செய்யப்பட்டனர். மற்றொருவர் தேடப்பட்டு வரு கிறார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்தே இந்த தேடுதல் நடத் தப்பட்டது.

தடை செய்யப்பட்டுள்ள தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்புடன் தொடர்புடையவர் என்ற சந் தேகத்தில் கைது செய்யப்பட்ட குருநாகல் மருத்து வமனையின் மருத்துவர் செய்கு சியாப்தீன் மொகமட்டுடன் தொடர்புடைய மேலும் பலர் மருத்துவமனையில் உள்ளனர் எனத் தெரி விக்கப்படுகிறது.

குருநாகல் போதனா மருத்துவமனையில் பணியாற்றும் மேலும் சில சந்தேக நபர்கள் குறித்து தகவல்கள் கிடைத்துள்ளன எனவும், அவர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகளை ஆரம் பித்திருப்பதாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ)

ஈஸ்டரன்று தேவாலயங்களுக்குள் கொல்லப்பட்டவர்கள் தியாகிகள்!

கத்தோலிக்க திருச்சபை அறிவிப்பு

கொழும்பு, மே 28

ஈஸ்டர் ஞாயிறன்று தேவாலயங்களுக்குள் நடத் தப்பட்ட குண்டுத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட வர்கள் தியாகிகளாகப் பிரகடனம் செய்யப்படவுள்ள னர்.

கத்தோலிக்க திருச்சபையின் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் இதனைத் தெரிவித்தார்.

பொரளையில் உள்ள தேவாலயத்தில் நேற்றுமுன் தினம் நடத்திய சிறப்பு பிரார்த்தனையில் கர்தினால் மல்கம் ரஞ்சித் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

சமயம் என்பது வாழ்க்கை. தமது சமய நம்பிக்கையி னாலேயே இவர்கள் கொல்லப்பட்டார்கள், தாக்கு தல்களை மேற்கொண்டவர்களுக்கு, வாழ்க்கையின் பெறுமானம் தெரியவில்லை என்றும் கர்தினால் மல் கம் ரஞ்சித் ஆண்டகை குறிப்பிட்டார். (ஐ)

முன்னொருபோதும் இல்லாத வறட்சி நிலைமை வடக்கில்!

3 இலட்சம் மக்கள் பாதிப்பு

கொழும்பு, மே 28

தற்போது நிலவும் கடுமையான வறட்சியினால், வடக்கு மாகா ணத்தில் 3 இலட்சம் மக்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றனர் என இடர் முகாமைத்துவ மையம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத் தில் 46 ஆயிரம் மக்கள் வறட்சியினால் பாதிக்கப்பட் டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் 56 ஆயிரம் பேர் வறட்சியி னால் பாதிக்கப்பட்டுள் ளனர்.

முல்லைத்தீவு மாவட் டத்தில் 40 ஆயிரம் பேர் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

வடக்கில் ஏனைய மாவட்டங்களான கிளிநொச்சி மற்றும் வவு னியாவிலும் வறட்சியினால் பொதுமக்கள் கடும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர். (ஐ)

நமழான் நற்சிந்தனைகள்

யா அல்லாஹ், நபி முஹமத் (ஸல்) அவர்களின் புனித பூமியை பாதுகாப்பது போல், எமது நாட்டையும் எமது சகல இன மக்களையும் பாதுகாத்து நிம்மதி சந்தோஷி மாக வாழ அருள் புரிவாயாக! ஆமீன்.

நோன்பு திறக்கும் நேரம்

மாலை 6.22

ஸஹர் முடிவு அதிகாலை4.17

(எம்.எல்.லாபிர்)

காலைக்கதிர் Kalaikathir

முழு உலகிற்குமே இந்தியா தலைமை தாங்க வேண்டும்!

மோடியின் ஆசை இது

உலகிற்கே இந்தியா தலைமை தாங்க வேண்டும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி தெரிவித் துள்ளார்.

மக்களவை தேர்தலில் வெற்றி பெற்ற பின் முதன்முறையாக பிரதமர் மோடி குஜராத் மாநிலம் சென்றார். அகமதாபாத் விமான நிலையத்தில் பிரதமரை, பா.ஜ.க. தலைவர் அமித் ஷா, முதலமைச் சர் விஜய் ரூபானி உள்ளிட்டோர் வரவேற்றனர். அதனைத்தொடர்ந்து விமான நிலையம் அருகே இருந்த சர்தார் வல்லபாய் படேல் சிலைக்கு பிரதமர் மோடி மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து பா.ஜ.க. தொண்டர்கள் மத்தியில் உரையாற் றிய பிரதமர் மோடி, சூரத்தில் தீ விபத் தில் மாணவர்கள் 22 பேர் பலி யானமை தன்னை சோகத்தில் ஆழ்த்தி விட்டதாகக் கூறினார்.

பிள்ளைகளைப் பறிகொடுத்த வர்களுக்கு, அதனைத் தாங்கும் சக்தியை தர வேண்டும் என்று கடவுளிடம் பிரார்த் திக்கிறார் என மோடி தெரிவித்தார்.

6 ஆவது கட்டத் தேர் தல் பிரசாரத்தின் போது பா.ஜ.க. 300க்கும் அதி கமான தொகுதிகளில் வெற்றி பெறும் என்று தான் பேசியபோது, தன்னைப் பலர் கிண்டல் செய்தனர் எனப் பிரதமர் குறிப்பிட்டார். தாம் கூறியமை போலவே மக்கள் பா.ஜ.கவை வெற்றி பெற செய்தனர் என அவர் கூறினார்.

அடுத்த 5 ஆண்டுகள் முக்கிய மானவை என்று கூறிய பிரதமர், சாதாரண குடிமக்களின் பிரச்சி னையைத் தீர்க்க இந்த 5 ஆண்டு களைப் பயன்படுத்த இருக்கிறார் எனக்குறிப்பிட்டார். உலக அரங்கில் இந்தியாவின் நிலையைத் தாம் மேம்படுத்த உள்ளார் எனக் கூறிய மோடி, உலகிற்கே இந்தியாதலைமை தாங்க வேண்டும் என்று உறுதிபட தெரிவித்தார்.

மோடி தனது பேச்சை நிறைவு செய்யும் போது கூட்டத்தில் இருந்த வர்கள் செல்போனில் வெளிச்சத்தை ஒளிரச் செய்தனர்.

இதையடுத்து காந்திநகரில் தனது தாயார் ஹீராபென் மோடியை அவரது இல்லத்தில் சென்று சந் தித்து பிரதமர் ஆசி பெற்றார்.

இதனிடையே, உத்தரப் பிரதேச மாநிலம், வாரணாசி தொகுதியில் தம்மைத் தேர்ந்தெடுத்த மக்க ளுக்கு நன்றி தெரிவிப்பதற்காக பிரதமர் மோடி நேற்று வாரணாசி சென்றார்.

'டுப்ளிகேட்' நபரை நிறுத்தி பரப்புரை செய்தாரா கம்பீர்?

சர்ச்சையைக் கிளப்புகிறது ஆம்ஆத்மி

சென்னை, மே28

தன்னைப் போன்ற உருவம் கொண்டவரை வைத்து தேர்தல் பரப்புரை செய்தது போல அல்லாமல், கௌதம் கம்பீர் இனியாவது மக் க ளுக்கு உண்மையாக நடந்துகொள்ளவேண் டும் என ஆம் ஆத்மி கூறியுள்ளது.

கிழக்கு டெல்லி மக்களவை தொகுதி யில் முன்னாள் கிரிக் கெட் வீரர் கௌதம் கம்பீர் பா.ஜ.க. சார்பாக போட்டியிட்டார்.

தேர்தல் பரப்புரை யின்போது, வெயில் மற்றும் துருக்குபயந்து, ஏசி காரிலேயே கம்பீர் அமர்ந்துகொண்டார் எனவும், தன்னைப் போலவே உருவ ஒற் றுமை கொண்ட ஒரு நபரை வைத்து பரப்பு ரையை கம்பீர் மேற்கொண்டார் எனவும் ஆம் ஆத்மி உள்ளிட்ட எதிர்க் கட்சிகள் விமர்சனம் செய்திருந்தன.

கம்பீர் தற்போது வெற்றிபெற்றுள்ள நிலை யில், இதுகுறித்து கருத்து தெரிவித்த ஆம் ஆத்மி செய்தித் தொடர்பாளர் சவுரப் பரத்வாஜ், கம்பீர் போலியாக செயல்படாமல் இனிமேலாவது மக்களிடத்தில் சென்று நிஜமாக அவர்களைச் சந்திக்கவேண்டும் என கூறினார்.

தேர்தல் கெடுபிடி விதிமுறைகள் இந்தியாவில் ஞாயிறுடன் நீக்கம்

புதுடில்லி, மே28

நாடு முழுவதும் தேர்தல் விதிமுறை கள் விலக்கிகொள்ளப்படுகின்றன என இந்தியத் தேர்தல் ஆணையம் அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது.

நாடு முழுவதும் கடந்த ஏப்ரல் மாதம் நாடாளுமன்ற தேர்தல் மற்றும் 4 மாநில சட்டசபை தேர்தல் அறிவிக் கப்பட்டது. இதைத்தொடர்ந்து தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் முதலே நடத்தை விதிமுறைகள் நடைமுறைக்கு வருகின் றன என அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் தேர்தல் முடிந்து முடிவுகளும் அறிவிக்கப்பட்ட நிலையில் தேர்தல் நடத்தை விதிகள் மே 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையுடன் விலக் கிக் கொள்ளப்படுகின்றன எனத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதன் மூலம் கடந்த 2 மாதங்களாக நாடு முழுவதும் நீடித்து வந்த தேர்தல் விதிமுறைகள் விலக்கப்பட்டுள்ளன. நேற்று முதல் வழக்கமான நலத்திட்ட அறிவிப்புகள், நலத்திட்டங்கள் வழங் குவது உள்ளிட்ட பணிகள் தொடங்கும் எனத் தெரிகிறது.

இதேபோல் வாகன தணிக்கை உள்ளிட்டகெடுபிடிகளும் இருக்கா எனத் தெரிகிறது.

சுவிஸில் கறுப்புப் பணம் பதுக்கிய 11 பேருக்கு அந்த அரசு நோட்டீஸ்

சுவிற்ஸர்லாந்தில் கறுப்புப் பணத் தைப் பதுக்கி வைத்துள்ளவர்கள் என்று கூறப்படும் இந்தியர்களில் 11 பேருக்கு ஒரே நாளில் நோட்டீஸ் அனுப்பப்பட் டுள்ளது.

சுவிற்ஸர்லாந்து வங்கிகளில் கறுப் புப் பணத்தை பதுக்கி வைத்துள்ள இந் தியர்களின் விவரங்களைப் பகிர்ந்து கொள்ளும் நடவடிக்கையை இந்திய அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தத் தின்படி, அந்நாட்டு அரசு மேற்கொண் டுள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில் இருந்து இதுவரை 25 இந்தியர்களுக்கு சுவிற் ஸர்லாந்து அரசு சார்பில் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. கடந்த 21 ஆம் திகதி மட்டும் 11 பேருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

அதில் கடைசி வாய்ப்பாக வங்கி கணக்கு விவரங்களை பகிரக்கூடாது என்பதற்கான உரிய ஆதாரத்துடன் 30 நாள்களுக்குள் மேன்முறையீடு செய்து கொள்ளலாம் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

சுவிற்ஸர்லாந்து வங்கிகளில் பணம் வைத்திருக்கிறார்கள் என கிருஷ்ண பகவான் ராம்சந்த், கல்பேஷ் ஹர்த் கினரி வாலா உள்ளிட்ட இந்தியர்களின் பெயர்கள் ஏற்கனவே கசிந்தமை குறிப் பிடத்தக்கது.

ஒன்றரைக் கோடி ரூபாவை வீதியில் விட்டெறிந்த நபர்!

சென்னையில் சாலையில் ஒரு கோடி 56 லட்சம் ரூபா பணத்தை சாலையில் வீசிவிட்டு சென்ற மர்ம நபரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

சென்னை கொட்டூர்புரம் காவல் சாரகத்திற்குஉட்பட்டபகுதியில்ஞாயிறு நள்ளிரவில் பொலிஸார் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர். அப்போது ஒரு மர்ம நபர் அங்கே பைக்கில் சுற் றித் திரிந்திருக்கிறார். அவர் மேல் சந் தேகம் ஏற்படவே அவரை விசாரிக்க அழைத்தபோது வராமல், பைக்கில் வேகமாகத் தப்பித்துப்போயிருக் கிறார். உடனே பொலிஸார் ஜீப்பில் அவரை வேகமாகத் துரத்திச் சென்றி ருக்கின்றனர்.

அப்போது அந்த நபர் பைக்கில் வைத்திருந்த சில பைகளை வீதியில் வீசியெறிந்துவிட்டு வேகமாகத் தப் பிச் சென்றுவிட்டார்.

அந்த பையை எடுத்து திறந்து பார்த்தபோது அதில் சுமார் 1கோடியே 56 லட்சம் பணம் இருந்திருக்கிறது. தப்பி சென்ற அந்த நபர் யார் என்பது குறித்து பொலிஸார் விசாரித்து வரு கின்றனர்.

புதிய எம்.பிக்கள் 233 பேர் மீது குற்ற வழக்குகள் நிலுவையில்!

சென்னை, மே28

நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்ற எம்பி.க்களில் 43 சதவீதம் பேர் மீது குற்ற வழக்குகள் இருக்கின்றன என ஜனநாயகச் சீர்திருத்தச் சங்கம் என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

வெற்றி பெற்ற 539 எம்.பிக்களை ஆய்வு செய்ததில், 233 எம்.பிக்கள் மீது குற்ற வழக்குகள் இருக்கின்றமை தெரியவந்துள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இது 2014 ஆம் ஆண்டுடன் ஒப் பிடும் போது 26 சதவீதம் அதிகம் என் றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பா.ஜ.கவின் எம்.பிக்கள் 116 பேர் மீதும், காங்கிரஸ் கட்சியின் எம்.பிக்கள் 29 பேர் மீதும், ஐக்கிய ஜனதா தளம் கட்சியை சேர்ந்த 13 எம்.பிக்கள் மீதும் குற்ற வழக்குகள் இருக்கின்றன எனக் கூறப்பட்டுள்ளது.

தி.மு.கவின் 10 எம்.பிக்கள், திரிணா முல் காங்கிரஸைச்சேர்ந்த 9 எம்.பிக்கள் மீதும் குற்ற வழக்குகள் உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் புதிய அரசுடன் பேசித் தீர்க்க பாக். தயாராம்!

இஸ்லாமாபாத், மே28

அனைத்து பிரச்சினைகள் குறித் தும், புதிதாக அமையும் இந்திய அரசுடன் பேச்சு நடத்தத் தயாராக உள்ளோம் என பாகிஸ்தானின் வெளியுறவு அமைச்சர், ஷா மஹ்மூத் குரேஷி தெரிவித்துள் ளார்.

இந்தியா – பாகிஸ்தான் இடையே யான உறவு மோசமான நிலையில் உள்ளது.

இந்த நிலையில், 'பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு மீண்டும் அமைந்தால்தான் இரு தரப்பு பேச்சு நடந்து, பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வாய்ப்பு ஏற்படும்' எனக் கடந்த ஏப்ர

லில், அந்நாட்டு பிரதமர், இம்ரான் கான் கூறியிருந்தார். தற்போது, லோக்சபா வுக்கு தேர்தல் முடிந்து, பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு மீண் டும் அமைய உள்ளது. தேர்தல் முடி வுகள் வெளியான அன்றே பிரதமர் நரேந்திர மோடிக்கு இம்ரான் கான் வாழ்த்து தெரிவித்தார்.

அதே நாளில், மத்திய ஆசிய நாடான கிர்கிஸ்தானில் நடந்த ஷாங் காய் ஒத்துழைப்பு அமைப்பின் வெளி யுறவு அமைச்சர்கள் மாநாட்டில் இந் திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜை பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் குரேஷி சந்தித்தார். 'பேச்சு மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முன்வரவேண்டும்' என, அப்போது அவர் கேட்டுக் கொண்டார்.

இந்த நிலையில், பாகிஸ்தானின் முல்தானில் நடந்த, ஒரு நிகழ்ச்சியில், அந்த நாட்டு வெளியுறவு அமைச்சர், ஷா மஹ்மூத் குரேஷி பேசியபோது இந் தியா – பாகிஸ்தான் இடையே உள்ள அனைத்துப்பிரச்சினைகளுக்கும், பேச்சு நடத்தி தீர்வு காண்பதற்கு தயாராக உள் ளோம்.

இந்தப் பிராந்தியத்தில் அமைதி நிலவவும், இரு நாடுகளும் வளர்ச்சியின் பாதையில் செல்வதற்கும், இணைந்து செயல்பட வேண்டும். அதற்கு நாங்கள் தயாராக உள்ளோம். – என்று அவர் கூறினார்.

(உ)

தொடர் குண்டு வெடிப்புகளால் காத்மண்டுவில் நான்கு பேர் பலி

காத்மாண்டு,மே28

நேபாள தலைநகர் காத்மாண்டுவில் அடுத்தடுத்து மூன்று இடங்களில் வெடிகுண்டுதாக்குதல் நிகழ்த்தப்பட்டது. அதில், 4 பேர் பலியாகினர்.

சுகேதரா, கட்டிகுலோ மற்றும் நாக்துங்கா ஆகிய இடங்களில் நிகழ்ந்த குண்டுவெடிப்புகளில் 4 பேர் உயிரிழந்துள்ளனர். 7 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குண்டுவெடிப்பைத் தொடர்ந்து அந்த பகுதி முழுவதும் பொலிஸாரின் முவுக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. மேலும் காத்மண்டுவின் முக்கிய பகுதிகளில் பாதுகாப்பு படையினர் தீவிர சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

குண்டுவெடிப்பில் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தில் 9 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் குண்டுவெடிப்பு குறித்து விசாரிக்க நேபாள இராணுவம் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர்.

இந்தத் தாக்குதலுக்கு மாவோயிஸ்டுகள் காரணமாக இருக்கலாம் என்று தாங்கள் சந்தேகிக்கின்றனர் என உள்ளூர் பொலிஸார் தெரிவித்தனர். எனினும் எந்த இயக்கமும் தற்போது வரை இச்சம்பவத்துக்குப் பொறுப்பேற்கவில்லை.

பிரி. பிரதமர் பதவிக்கு எட்டுப் பேர் களத்தில்!

லண்டன்,மே28

பிரிட்டன் பிரதமர் பதவியிலிருந்து தெரசா மே விலகவுள்ளமையை அடுத்து, புதிய பிரதமராவதற்காக, ஆளும் கொன்சர் வேடிவ் கட்சியைச் சேர்ந்த, எட்டு பேர் கடும் முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

பிரிட்டன் நாடு, ஐரோப்பிய கூட்டமைப்பிலிருந்து விலகுவது தொடர்பான பிரச்சினையில் பிரதமரும் ஆளும் கட்சித் தலைவருமான தெரசா மேக்குக் கடும் நெருக்கடி எழுந்தது. அவரது கட்சியினரே அவருக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கினர். இதையடுத்து கொன்சர்வேடிவ் கட்சித் தலைவர் பதவியிலிருந்து தாம் விலகவுள்ளார் எனத் தெரசா மே சமீபத்தில் அறிவித்தார். பிரதமர் பதவிலிருந்தும், விரைவில் அவர் விலகவுள்ளார். இதையடுத்து, கொன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் பதவிக்கு அந்தக் கட்சியைச் சேர்ந்த எட்டு மூத்த தலைவர்கள் கடுமையாக முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

பிரிட்டனின் முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் போரிஸ் ஜோன்சன் பெயர் இதில் முதலில் உள்ளது. மைக்கேல் கோ, ஆண்ட்ரியா, ஜெர்மி ஹன்ட், ஸ்டீவர்ட், மட் ஹான்காக், எஸ்தர் மேக்வே உள்ளிட்டோரும் போட்டியில் உள்ளனர். கொன்சர்வேடிவ் கட்சியின் தலைவராகத் தேர்வு செய்யப்படுபவர் பிரதமராகப் பதவியேற்பார்.

இஸ்ரேல் பிரதமருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டம்!

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மீது ஊழல் குற்றச்சாட்டு இருந்து வரும் நிலையில், நீதிமன்றத்தின் அதிகாரத்தை குறைக்க அவர் முயற்சிக்கிறார் எனக் கூறி எதிர்க்கட்சிகள் போராட்டத்தில் ஈடுபட்டன.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன் யாகு மீது லஞ்சம் மற்றும் மோசடி குற்றச்சாட்டு உள்ளது. இதுதொடர்பாக ஆதாரம் இருப்பதாகவும், அவர் மீது வழக்குப் பதிவு செய்ய முகாந்திரம் உள்ளதாகவும் சட்டமா அதிபரிடம் அந்நாட்டுப் பொலிஸ் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தன் மீதான குற்றச்சாட்டுகளில் இருந்து தப்பித்துக்கொள்ளும் வகையில், உச்ச நீதிமன்றத்தின் அதிகாரத்தை குறைக்கும் விதத்திலான பிரேரணையை பெஞ்சமின் நெதன் யாகு கொண்டுவர முயற்சிக்கிறார் என எதிர்க் கட்சிகள் குற்றம்சாட்டியுள்ளன.

இதைக் கண்டித்து, இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக் கானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, பெஞ்சமின் நெதன்யாகு பதவி விலக வேண் டும் எனவும் அவர்கள் வலியுறுத்தினர்.

காட்டுத் தீயை அணைக்க நீருடன் சென்ற ஹெலி வீழ்ந்து நொறுங்கியதில் 6 பேர் பலி!

மெக்ஸிக்கோ சிட்டி, மே28

மெக்ஸிக்கோவில், காட்டுத்தீயை அணைக்க சென்ற ஹெலிக்கொப்டர் தரையில் விழுந்து நொறுங்கியதில் 6 பேர் பலியாகினர்.

மெக்ஸிக்கோவின் மத்திய பகுதியில் அமைந்துள்ள குவரடேரோ மாகாணத்தில் ஜல்பன் டி லா சியரா நகரில் உள்ள வனப்பகுதிகடந்த சில நாள்களாகத் தீப்பற்றி எரிந்து வருகிறது.

தீயணைப்பு வீரர்கள் மற்றும் வனத்துறை அதிகாரிகள் தீயைக் கட்டுக்குள் கொண்டு வரப் போராடி வருகின்றனர்.

இந்த நிலையில், காட்டுத்தீயை அணைப்பதற்காக 2,500 லீற்றர் தண்ணீருடன் கடற் படைக்குச் சொந்தமான 'எம்ஐ - 17' ஹெலிக்கொப்டர் மாகாண தலைநகர் சாண்டியாகோ டி குவரடேரோவில் இருந்து புறப்பட்டுச் சென்றது.

இதில், 5 கடற்படை அதிகாரிகளும், வனத்துறை அதிகாரி ஒருவரும் இருந்தனர். இந்த ஹெலிக் கொப்டர் ஜல்பன் டி லா சியரா நகருக்கு அருகே மலைப் பாங்கான பகுதியில் சென்றுகொண்டிருந்த போது, திடீரென தரையில் விழுந்து நொறுங்கியது.

இந்தக் கோரவிபத்தில் ஹெலிக்கொப்டரில் பயணம் செய்த அதிகாரிகள் 6 பேரும் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

விபத்தில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு அதிபர் லோபஸ் ஒப்ரடோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

மெக்ஸிக்கோவில் நடந்த பரிதாபம்

ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் – 17, கஸ்தூரியரர் வீதி, 306, 308 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் .சபாரட்ணமும் பெண் இராசம்மாவும் என்னும் பெயரில் ஆதனப்பதிவேட்டில் காணப்படுகிறது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் காரைதீவு கிழக்கு விளானையைச் சோந்த பரமு சபாரத்தினமும் பெண் இராசம்மாவும் பிரசித்த நொத்தாரிசு க.ஆறுமுகம் முகதாவில் 20.12.1972 ஆம் திகதியிடப்பட்ட 7658 இலக்கத்தில் ஆ.சிதம்பரத்தின் சீவிய உரித்துக்கமைவாக தமது மகள் புனிதவதியாருக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். பரமு சபாரத்தினம் மகள் புனிதவதியார் அதே பிரசித்த நொத்தாரிசு முகதாவில் 06.06.1974 ஆம் திகதியிடப்பட்ட 8486 இலக்கத்தில் பரமு சபாரத்தினம் மகள் சிவனேஸ்வரிக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.பரமு சபாரத்தினமும் பெண் இராசம்மாவும் 20.12.1972 ஆம் திகதியிடப்பட்ட 7659 இலக்கத்தில் ஆ.சிதம்பரத்தின் சீவிய உரித்துக்கமைவாக தமது மகள் சிவனேஸ்வரிக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். பின்னர் ஈஸ்வரன் மகாதேவாவும் பெண் சிவனேஸ்வரியும் (11ம் வட்டாரம் புங்குடுதீவைச் சோந்த பரமலிங்கம் ரமேஸ்க்கு) பிரசித்த நொத்தாரிசு திருமதி.ச.இளங்கோவன் முகதாவில் 07.10.2017 ஆம் திகதியிடப்பட்ட 14320 இலக்கத்தில் கந்தையா பரமலிங்கத்தின் சீவிய உரித்துக்கமைய வழங்கியுள்ளார்.

ஆதன விபரம்: – வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார் பண்ணை வடகிழக்கு இறை அடியார்க்கு நல்லான் வளவும் தலை மடையும் மெடியார்க்கு நல்லான் குளத்தில் வரம்பும் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஏ.நகுலேஸ் அவர்களின் வரைபட இலக்கம் 1260/10.04.2004 இல் துண்டு 3, 4 எனக்காட்டப்பட்ட நிலபரப்பு குளி 13.98 ஆகும் எனினும் இவ்வாதனம் தற்போது விண்ணப்பதாரியினால் யாழ் மாநகரசபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட உத்தரவுபெற்ற நில அளவையாளர் ந.கேதீஸ்வரன் அவர்களால் 30.06.2018ஆம் திகதிய 3982/1ம் இலக்கத்தில் அளந்து தயாரித்த படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்டு இதன் விஸ்தீரணம் குளி 15.04 எனக் கூடுதலாகக் காட்டப்பட்டுள்ளது.

கிழக்கு: – வீடமைப்புத் திணைக்களத்தின் ஆதனமும் கன்னாதிட்டி குளமும்.

வடக்கு: – சபாரத்தினம் சிவபாதவிருதயரின் ஆதனம்

மேற்கு:– கஸ்ரியரர் வீதி

தெற்கு:– இராசதுரை இராசேந்திரத்தின் ஆதனம்.

தற்போது கந்தையா பரமலிங்கம் ரமேஸ் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது கந்தையா பரமலிங்கம் ரமேஸ் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இம்மானுவல் ஆனல்ட்)
முதல்வர்.

காலைக்கதிர் Kalaikathir



போர் ஓய்ந்து பத்து ஆண்டுகள் ஓடிவிட்டன

எப்போது கரையேறும் தமிழ்ச் சமூகம்?

மூன்று தசாப்தங்கள் உள்நாட்டுப்போரால் கடுமையான பாதிப் புகளுக்குஉள்ளான இலங்கையில், அமைதியும் வளர்ச்சியும் திரும்பப் பத்தாண் டுகள் போதுமானதல்ல என் றாலும், இந்தப் பத்தாண்டுகளில் போரால்உருக் குலைந்ததமிழ்ச் சமூகம், எந்த அளவுக்குமீண்டெ முந்து மேலே கரையேறி வந்தி ருக்கிறது என்பதைப் பார்க்கும் போது ஏமாற்றமும் வேதனை யுமே எஞ்சுகிறது.

பத்தாண்டுகளாக நிலவும் அமைதியால் ஓரளவுக்கே பொருளாதார வளர்ச்சி ஏற்பட் டிருக்கிறது. தமிழ்ச் சிறுபான் மைச் சமூகத்தினரின் பெரும் பாலான குறைகள் அப்படியே தீர்க்கப்படாமல்தொடர் கின்றன. மீள்குடியமர்த்தல்கள், மறு வாழ்வுப் பணிகள் ஓரளவுக்கு நடந்துள்ளன. ஆனால், அவை குறித்தும் மக்களிடையே புகார் கள் அநேகம். தங்களுடைய காணிகளை ராணுவம் இன்ன மும் ஆக்கிரமித்திருக்கிறது என்கின்றனர் தமிழர்கள்.

தமிழர்களுடைய நிலங்கள் மட்டு மல்ல; அரசுக்குச் சொந்த மான நிலங்களும் ராணுவத் தின் வசம் உள்ளன. உறவினர் களை இழந்த ஆயிரக்கணக் கான தமிழர்கள் பத்தாண்டு களாகியும் அவர்களைத் தேட வும் முடியாமல், இருக்கும் இட மும் தெரியாமல் தவிக்கின்ற னர்.

காணாமற்போனவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கான அலுவலகம் நம்பிக்கையூட்டும் வகையில் செயல்படவில்லை. போரின் இறுதிக்கட்டத்தின் போது அநியாயமாகக் கொல்லப்பட்ட வர்களின்குடும்பங்களுக்கு இன் னும் முழுமையாக இழப்பீடும், நீதியும் வழங்கப்படவில்லை. இலங்கை தேசியக் கட்சிகளின் தலைவர்கள் இந்த விவகாரத் தில்கூட அற்பமான அரசியல் லாபம் தேடுவதுதான் தொடர் கிறது.

போராளிகளுக்கு எதிரான போர் முடிந்த காலத்தின் முற் பகுதி, ஆட்சியாளர்கள்தங்களு டைய சாகசங்கள் குறித்துப் பெருமை பாராட்டிக்கொண்டதி லேயே கழிந்தது. அடுத்த பாதி, போர்க் குற்றங்களுக்காக சர்வ தேசச் சட்டங்களின்படி தங்களு டைய ராணுவத்தினர்தண்டிக்கப் பட்டுவிடக் கூடாது என்று தடுப்ப திலேயே கழிந்துவிட்டது. 2015 இல் புதிய அரசு பதவியேற்றது.

ஜனநாயக நிர்வாகம், அரசமைப்புச் சீர்திருத்தம் ஆகிய வாக்குறுதிகள் தரப்பட்டன. ஆனால், வாக்குறுதிகள் எது வும் நிறைவேற்றப்படும் பாதை நோக்கிநகர்ந்தபாடில்லை. போர் முடிந்து பத்தாண்டுகள் ஆன பிறகும்கூட போரின்போது அத்துமீறிய செயல்களில் ஈடு பட்டவர்கள் சட்டப்படியான நட வடிக்கைகளுக்கு உள்ளாக்கப் பட வில்லை; காணாமற்போன வர்கள்கண்டுபிடிக்கப்படவில்லை என்கிறநிலையில், சமூகங்கள் இடையேயான இணக்கம் உண் டாவது சிரமம்.

அதிகாரத்தைக் கைப்பற் றுவதிலேயே எல்லாக் கட்சிகளும் குறியாக இருக்கின் றமையால் நல்ல நிர்வாகம், அனைவருக்கு மான பொருளாதார வளர்ச்சி, அரசியல் சட்டப்படியான தீர்வு ஆகியவை தொலைதூரக் கன வுகள் ஆகிக்கொண்டிருக்கின் றன.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கான அடித் தளம் சமூகங்கள் இடை யான பிணைப்பின் மீதும், நாட் டின் ஒவ்வொரு குடிமகனும் இந்த அரசு தன்னுடையது என்ற நம் பிக்கையின் மீதும்தான் கட்டப் படுகிறது.

பொருளாதார வளர்ச்சி தனித்து உருவாவது அல்ல; நடந்த தவறுகளுக்கு மனதாரப் பொறுப்பேற்பதன் வாயிலா கவே இலங்கையில் தமிழர்கள் பிரச்சினைக்கு அரசு தீர்வுகாண முடியும்.

நன்றி- த ஹிந்து தமிழ் சிந்தனைக்களம்

யாழ். பிரதேச செயலக கலாசார அதிகார சபையின் பொதுக்கூட்டம் கடந்த வெள்ளிக் கிழமை மாலை செயலக மண் டபத்தில் பிரதேச செயலாளர் தலைமையில் இடம்பெற்ற போது பின்வருவோர் 2019 ஆம் ஆண்டுக்கான புதிய செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் – பிரதேச செயலாளர் இ.சுதர்சன், உப தலைவர் – இ.யஸ்ரின், செயலாளர் – சா.வி.ஜோன், கலிஸ்ரஸ், உப செயலாளர்– எஸ்.சுந்தரராஜன், பொருளாளர் – எஸ்.கந்தநேசன், நிர்வாகக் குழுவில் நெல்சன், செல்வ வடிவேல், ரஜீவ், யாழ் தர்மினி, செ.கெலன்திரேசா மற்றும் யாழ். பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளி லிருந்து உறுப்பினர்களும் சபையில் இடம்பெறுவர்.

(இ-19)

அண்மையில் பலாலி இராணுவத் தலைமையத்தில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மற்றும் உயர்மட்ட இராணுவ அதிகாரிகளுடன், யாழ். கிளிநொச்சி மாவட்ட ஜம் இய்யத்துல் உலமா சபையினர் சந்தித்து தற்போதைய சூழ்நிலை மற்றும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்கள் பற்றியும் கலந்துரையாடினர்.

அத்துடன் அல்குர்ஆன் சிங்கள மொழி பெயர்ப்பு பிரதியும், அகில இலங்கை ஜம்இய் யத்துல் உலமாவின் சிங்கள மொழியிலான சகவாழ்வு நூல்களும் அன்பளிப்பு செய்யப் பட்டன. (இ-19)

(படங்கள் - எம்.எல்.லாபிர்)

கடந்த ஏப்ரல் 21 இல் குண்டுத்தாக்குதலில் உயிர் நீத்தவர்களுக்காக சர்வமத குரு மார்களின் ஒத்துழைப்புடன் அண்மையில் யாழ். மாவட்ட சர்வோதய நிலையத்தின் அமைப்பாளர் சிறியுகேந்திரா தலைமையில் யாழ். கண்டி வீதி சர்வோதய தலைமையக மண்டபத்தில் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது. மதத் தலைவர்களுடன் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணமும் கலந்து கொண்டார். (இ-19)

ஈஸ்டர் ஞாயிறன்று குண்டுத் தாக்குதலில் உயிர்நீத்தவர்களுக்காக அஞ்சலி நிகழ்வு யாழ். மானிப்பாய் வீதி, பெரிய முஹிதின் பள்ளியில் யாழ். மாநகர சபை உறுப்பினர் கே.எம்.நிலாம் ஏற்பாட்டில் நடைபெற்ற போது உலமாக்களும் , பொதுமக்களும் கலந்து கொண்டனர். (இ-19)

(படங்கள் - எம்.எல்.லாபிர்)

வவுனியா தமிழ் மத்திய ம.வியின் ஆசிரியர்கள் நேற்று போராட்டம்

வவுனியா, மே 28

வவுனியா கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச்சங்கப் பொதுக் கூட்டத்தில் ஆசிரியர் சமூகம் இழிவுபடுத்தப்பட்டதுடன், ஆசிரியர்கள் விபசாரிகள் என்று தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்பு வெளியிட்டு நேற்றுக் காலை தமிழ் மத்திய மகா வித்தியாலயத்துக்கு முன்பாக ஒன்றிணைந்த ஆசிரியர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் தெரிவிக்கையில் –

ஆசிரியர்களாக நாங்கள் எவ்வாறான ஒரு பொறுப்பைக் கையில் எடுத்திருக்கின்றோம். எங்களை விபசாரி என்று மனம் நோகடித்தால் நாம் கடமையை விட்டுச் சென்றால் இந்தப் பாடசாலை என்னாவது?. மூவாயிரம் மாணவர்களின் கல்வி நிலை என்னாவது? அதிபரில் தவறு இருக்கலாம். ஆசிரியர்களில் தவறு இருக்கலாம். மாணவர்களில் தவறு இருக்கலாம். தவறு செய்யாத மனிதர்கள் இல்லை. தவறு இருந்தால் தகுந்த முறையில் அவர்களுக்குத் தண்டனைகள் வழங்கப்படலாம்.

ஆதாரங்களுடன் தவறை நிரூபித்தால் தண்டனைகளைப் பெற்றுக் கொடுக்கலாம். நாங்களும் அவற்றுக்கு மாறாக நிற்கவில்லை. ஆனால் பெரிய ஒரு சமூகத்தில் – பெரிய ஒரு சபையில் – ஒரு தனிமனிதனை – எங்களின் பாடசாலையின் அதிபரை அவமானப்படுத்தியது எங்கள் அனைவருக்கும் கவலையளிக்கின்றது. ஆசிரியர்களாக நாங்கள் அவமானமடைந்திருக்கின்றோம். குற்றச்சாட்டுக்களை முன்வைத்தவர்கள் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்கவேண்டும்.

அதுவரை நாங்கள் மாணவர்களிடம் செல்ல முடியவில்லை. எந்த முகத்தை வைத்துக்கொண்டு அங்கு செல்வது? மாணவர்கள் எங்களிடம் கேள்வி கேட்கின்றார்கள். என்ன பதிலை சொல்வது? எமது கல்வித் திணைக்களம் இதற்கு தகுந்த நடவடிக்கையை மேற்கொண்டு இதனுடன் தொடர்புடைய ஆசிரியர்களை தற்காலிகமாக இடைநிறுத்தவேண்டும். இதுவே எங்கள் அனைவரின் கோரிக்கையாகும் – என்றனர்.

கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றபோது பாடசாலைக்குச் சென்ற வவுனியா தெற்குக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன் பாடசாலை அதிபருடன் மேற்கொண்ட கலந்துரையாடலையடுத்து 30 நிமிடம் ஆர்ப்பாட்டம் மேற்கொண்ட ஆசிரியர்கள் தமது ஆர்ப்பாட்டத்தை முடித்துக்கொண்டு வகுப்புக்களுக்குச் சென்றனர். (ஜ – 100)

முல்லைத்தீவில் வறட்சியால் 12,766 குடும்பங்கள் பாதிப்பு!

குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு

முல்லைத்தீவு, மே 28

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்ட கடும் வறட்சி காரணமாக 12 ஆயிரத்து 766 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என மாவட்ட இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த காலத்தில் ஏற்பட்டுள்ள கடும் வெப்பம் காரணமாக மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். விவசாயச் செய்கைகள் அழிவடைந்துள்ளன. குடிதண்ணீருக்கு தட்டுபாடு ஏற்பட்டுள்ளது.

அதன்படி புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் ஆயிரத்து 967 குடும்பங்களைச் சேர்ந்த 6ஆயிரத்து 296 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர்.

கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தில் 10 ஆயிரத்து 799 குடும்பங்களை சேர்ந்த 33 ஆயிரத்தி 797 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனப் பதிவாகியுள்ளது.

இந்தப் பிரதேசங்களில் தேசிய இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தினரால் குடிதண்ணீர்த் தட்டுப்பாடான இடங்களுக்கு அதனை விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (ஐ)

அளம்பில் பகுதியில் கைக்குண்டு மீட்பு!

முல்லைத்தீவு, மே 28

முல்லைத்தீவு அளம்பில் பகுதியில் பனை வடலியில் வைக்கப்பட்ட கைக்குண்டு ஒன்று நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

அளம்பில் பகுதி வீதியில் பனை வடலி மட்டையில் வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்தக் கைக்குண்டு காணப் பட்டது.

சம்பவம் தொடர்பில் முல்லைத் தீவு பொலிஸாருக்கு தகவல் கொடுக் கப்பட்டதை அடுத்து அங்கு வந்த அவர்கள் அதனைப் பார்வையிட்டது டன் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய சிறப்பு அதிரடிப் படையினரைக் கொண்டு அகற் றினர். (ஐ)

வவுனியாவில் சிறப்பாக நடைபெற்ற கலை இலக்கிய கலாசாரப் பெருவிழா

வவுனியா, மே 28

வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத்தின் கலை இலக்கிய கலாசார பெருவிழா வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ. சிவ.குகநாத குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

வவுனியாசிந்தாமணிப்பிள்ளையார் ஆலய கலாசார மண்டபத்தில் நேற்று முன் தினம் காலை முதல் மாலை வரை நடைபெற்ற இந்த நிகழ்வில் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்தவர்கள் மற்றும் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த அந்தணர்கள் மற்றும் கலைஞர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது சிவச்சாரியார்கள், கலைஞர்கள் என 121 பேர் வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத்தினால் கௌரவிக்கப்பட்டிருந்தனர். சைவப் பிரகாச மகளிர் கல்லூரி மாணவிகளால் தமிழ் மொழி வாழ்த்தும், நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரியின் மாணவிகளின் நடனம் மற்றும் சிவதாண்டவம், தமிழ் மாமணி தமிழருவி சிவகுமாரன் தலைமையில் சுழலும் சொற்போர் நிகழ்வும் நடைபெற்றன. கலை நிகழ்வுகளில் பங்குபற்றிய மாணவிகளுக்கும் கௌரவம் வழங்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை கலைப்பீடத்தின் தலைவர் கலாநிதி மகேஸ்வரக்குருக்கள் பாலகைலாசநாத சர்மா மற்றும் வைத்திய கலாநிதி வரதராஜா சுரேந்திரன், வைத்திய கலாநிதி குலசிங்கம் அகிலேந்திரன், கலாநிதி தமிழ்மணி அகளங்கன், வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் தி.திரேஸ்குமார் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (ஐ – 100)

வடக்கின் புதிய டி.ஐ.ஜி. நேற்று கடமையேற்றார்



யாழ்ப்பாணம், மே 28

வடக்கு மாகாணத்தின் புதிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி விஜயகுணவர்த்தன தனது கடமைகளை நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

காங்கேசன்துறையில் உள்ள சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலு வலகத்தில் பொலிஸாரின் அணி வகுப்பு மரியாதையுடன் அவர் அழைத்து வரப்பட்டார். பின்னர் மதத் தலைவர்களின் ஆசியுடன் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றிவந்தரொசான்பெர்ணாண்டோ இட மாற்றம் செய்யப்பட்டமையை அடுத்து தென் மாகாணத்தில் கடமையாற்றி வந்த விஜயகுணவர்த்தன வடக்கு மாகாணத்துக்கு நியமிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikathir

இந்தியாவைப் பதம் பார்த்த நியூசிலாந்து

இந்தியாவிற்கு எதிரான உலகக்கிண்ண பயிற்சி ஆட்டத்தில் 6 விக்கெட் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்றுள்ளது.

உலகக்கிண்ண தொடருக்கு முன்னதாக நடைபெற்று வரும் பயிற்சி ஆட்டத்தில், இந்தியா – நியூசிலாந்து அணிகள் நேற்று முன் தினம் மோதின.

இதில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது. அதன்படி ஆரம்ப ஆட்டக்காரர்களாகக் களமிறங்கிய இந்திய அணியின் தவான் 2(7), ரோகித்சர்மா 2(6) வந்த வேகத்திற்கு நடையைக் கட்டினர்.

இதனால் இந்திய அணிக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டது. அடுத்து வந்த வீரர்களும் வந்த வேகத்திற்கு பெவிலியன் திரும்ப ஆரம்பித்தனர்.

இதனால் இந்திய அணி 39.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் பறிகொடுத்து 179 ஓட்டங்களைப் பெற்றது.

இந்திய அணி சார்பில் அதிகபட்சமாக ரவீந்திர ஜடேஜா 54 ஓட்டங்களை குவித்திருந்தார். நியூசிலாந்து அணியில் ட்ரென்ட் போல்ட் 4 விக்கெட்டுகளையும், ஜேம்ஸ் நீம் 3 விக்கெட்டுகளையும், டிம் சவுதி, கொலின் டி கிராண்ட்ஹாம், லாக்கி பெர்குசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து எளிய இலக்கை நோக்கி களமிறங்கிய நியூசிலாந்து அணியின் துவக்க ஆட்டக்காரர் கொலின் மன்ரோ 4 ரன்களில் விக்கெட்டை பறிகொடுத்து வெளியேறினார்.

இது ரசிகர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தாலும், அடுத்து வந்த வீரர்கள் சிறப்பாக விளையாடியதால் 37.1 ஓவர்களுக்கு 180 ரன்களை குவித்து நியூசிலாந்து அணி வெற்றி பெற்றது.

நியூசிலாந்து அணியில் அதிகபட்சமாக ரோஸ் டெய்லர் 71 ஓட்டங்களும், அணியின் தலைவர் கேன் வில்லியம்சன் 67 ஓட்டங்களும் எடுத்திருந்தனர்.

கிண்ணத்தை தனதாக்கியது இளவாலை யங்கென்றீஸ்

வலிகாமம் லீக்கின் ஆதரவுடன் பிங்கள மோதக மாமரபிள்ளையார் ஆலய அறங்காவலரும் மகா வித்துவானுமாகிய கலாபூசணம் கலைவாருதி முகுதப்பிள்ளை விக்னேஸ்வரநாதன் ஞாபகார்த்தமாக அவரின் மைந்தன் ரமேஸ் அனுசரணையில் வட்டுக்கோட்டை வி.க நடத்தும் மின்னொளியிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நேற்று முன் தினம் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் இளவாலை சென்.லூட்ஸ் அணியை எதிர்த்து இளவாலை யங்கென்றீஸ் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 02:01என்ற கோல் கணக்கில் யங்கென்றீஸ் அணி வெற்றி பெற்றுக் கிண்ணத்தைத் தனதாக்கியது.

யங்கென்றீஸ் அணி சார்பாக சுரேந்தர், றெக்சன் ஆகியோர் தலா ஒரு கோலையும் மற்றும் சென்.லூட்ஸ் அணி சார்பாக தனுராஜ் ஒரு கோலையும் பெற்றுக் கொடுத்தனர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக சுரேந்தரும், இந்தத் தொடரின் நாயகனாக றெக்சனும் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ)

அடுத்த சுற்றுக்கு நுழைந்தது அண்ணாசிலையடி யுத் அணி

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையில் வதிரி டைமன்ஸ் விளையாட்டு கழகம் நடத்தும் வே.நகுலன் ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் அண்ணா சிலையடி யுத் அணியை எதிர்த்து சீரீ அம்பாள் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 02:00 என்ற கோல் கணக்கில் அண்ணாசிலையடி யுத் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது.

அண்ணாசிலையடி யுத் அணி சார்பாக சிந்துஜன், சாருஜன் ஆகியோர் தலா ஒரு கோலைப் பெற்றுக் கொடுத்தனர். (ஐ)

பயிற்சி ஆட்டத்தில் இங்கிலாந்தை வீழ்த்தியது ஆஸி.

சவுதம்டனில் நடைபெற்ற பயிற்சி போட்டியில் ஸ்டீவ் ஸ்மித்தின் சதத்தால் உலக சம்பியன் ஆஸ்திரேலிய அணி, இங்கிலாந்தை 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றிபெற்றுள்ளது.

காயம் காரணமாக இங்கிலாந்து அணி தலைவர் மோர்கன் இந்த போட்டியில் விளையாடவில்லை. அவருக்கு பதில் விக்கெட் காப்பாளர் ஜோஸ் பட்லர் அணியை வழிநடத்தினார்.

இந்த போட்டியில்நாணயச்சுழற்சியில்வென்ற இங்கிலாந்து அணிமுதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்ரேலியா அணியில் டேவிட் வோர்னர் 43 ஓட்டங்களையும்,ஷோன்மார்ஷ் 30 ஓட்டங்களையும், உஸ்மான் கவாஜா 31 ஓட்டங்களையும் எடுத்தனர்.

ஓராண்டுதடைக்கு பிறகு அணிக்கு திரும்பிய ஸ்டீவ் ஸ்மித் அபாரமாக விளையாடி சதமடித்தார். அவர் 116 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். இறுதியில் அவுஸ்ரேலியா அணி 50 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 297 ஓட்டங்களைக் குவித்தது.

இதனைத் தொடர்ந்து விளையாடிய இங்கிலாந்து அணி சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்தது. அந்த அணியில் அதிகபட்சமாக ஜேம்ஸ் வின்ஸ் 64 ஓட்டங்களையும் பொறுப்புடன் விளையாடிய தலைவர் ஜோஸ் பட்லர் 52 ஓட்டங்களையும் எடுத்தனர்.

கடைசி வரை போராடிய இங்கிலாந்து அணி 49.3 ஓவர்களில் 285 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்து 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இந்தியாவுடனான தோல்விகளுக்கு விரைவில் முற்றுப்புள்ளி இடுவோம்

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில், இந்தியாவுடனான தொடர் தோல்விகளுக்கு முற்றுப்புள்ளி வைப்போம் என பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரும், தற்போதைய தேர்வுக் குழுவின் தலைவருமான இன்சமாம் உல் ஹக் தெரிவித்துள்ளார்.

இதுவரை நடைபெற்றுள்ள சுமார் ஆறு உலகக் கிண்ணத் தொடர்களில் பாகிஸ்தான் அணி, இந்திய அணியை வென்றதில்லை.

இந்தநிலையில் எதிர்வரும் உலகக் கிண்ணத் தொடரில், இந்த தொடர் தோல்விகளுக்கு முற்றுப் புள்ளி வைப்போம் என இன் சமாம் உல் ஹக் கூறியுள்ளார். பாகிஸ்தானின் இணையத் தள மொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

இந்தியா – பாகிஸ்தான் போட்டியை இரசிகர்கள் மிகவும் தீவிரமாக எடுத்துக்கொள்கிறார்கள். சிலர் இந்திய அணியை உலகக் கிண்ண தொடரில் வீழ்த்தினால் மட்டுமே நாங்கள் மகிழ்ச்சி அடைவோம் என்று கூட கூறுகிறார்கள்.

எனினும், பாகிஸ்தான் மக்களின் விருப்பத்தை நிறைவு செய்யும் வகையில் இந்த தொடர் தோல்விக்கு இம்முறை உலகக் கிண்ண தொடரில் முற்றுப்புள்ளி வைப்போம் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

இந்தியாவை வீழ்த்துவதை போல் மற்ற அணிகளையும் வீழ்த்துகின்ற பலம் பாகிஸ்தான் அணியிடம் உள்ளது.

15 பேர் கொண்ட உலகக் கிண்ண அணியை தேர்வு செய்வது என்பது இலகுவான விடயம் என இரசிகர்கள் நினைக்கிறார்கள். அது ஒன்றும் அப்படி அல்ல. ஏனென்றால், ஏகப்பட்ட அழுத்தங்களுக்கு மத்தியில் தான் இறுதி அணியை நாங்கள் தெரிவு செய்கின்றோம்.

உதாரணமாக வேகப்பந்து வீச்சாளர்களை தேர்வு செய்வதில் மிகவும் கடினமாக இருந்தது. ஏனெனில், மொஹமட் அமிர், ஜுனைத் கான், உஸ்மான் ஷின் வாரி போன்ற வீரர்கள் பட்டியலில் இருந்தனர்.

ஆனாலும், மிகப் பெரிய அவதானத்தை எடுத்து மொஹமட் ஹஸ்னைனையும், வஹாப் ரியாஸையும் உலகக் கிண்ண அணியில் தேர்வு செய்தோம். இவர்களுள் புதிய கோணத்தில் பந்து வீசும் ஹஸ்னைன் 150 கி.மீ வேகத்தில் பந்துவீசக் கூடியவர்.

மற்ற பந்துவீச்சாளர்கள் சராசரியாக 130 முதல் 140 கி.மீ வேகத்தில் பந்துவீசும் திறன் படைத்தவர்கள்– என்றார்.

திடீரென மீண்டெழுந்து அதிர்ச்சி கொடுக்கும் அணிகளில் ஒன்றாக பார்க்கப்படும் பாகிஸ்தான் அணி, இறுதியாக விளையாடிய 10 போட்டிகளில் தோல்வி கண்டு படுமோசமான நிலையில் உள்ளது. அத்தோடு, உலகக் கிண்ண தொடரின் பயிற்சிப் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணியிடம் பாகிஸ்தான் அணி தோல்வியடைந்து கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது.

ஜூன் 21...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷ, எதிர்வரும் ஜூன் 21ஆம் திகதி முன்னிலையாகிச் சாட்சியமளிப்பார்.

இந்தத் தகவலை அவரது சட்டஆலோசகர் அணிதெரிவித்தது என்று அரச ஆங்கில வார இதழான 'தசண்டே' ஒப்சேவர் வெளியிட்டுள்ளது.

எனினும் முன்னாள் பாதுகாப்புச்செயலர் கோட்டாபய ராஜபக்ஷ, மெதமுலானவில் டி.ஏ.ராஜபக்ஷ நினைவிடத்தை அமைப்பதற்கு 33.9 மில்லியன் ரூபா அரச நிதியைத் தவறாகப் பயன்படுத்தினார் என்று குற்றம்சாட்டப்பட்டு, கொழும்பு சிறப்பு மேல் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்படும் வழக்கு நாளாந்த விசாரணைக்காக ஜூன் 19ஆம் திகதி நியமிக்கப்பட்டுள்ளது.

மூன்று மேல் நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய தீர்ப்பாயம் (ட்ரையல் அட் பார்) முன்னிலையில் நடைபெறும் அந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் என்ற அடிப்படையில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ, கட்டாயம் முன்னிலையாக வேண்டும்.

இந்தநிலையில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் இடம்பெறும் ஆள்கொணர்வு மனு மீதான விசாரணையில் சாட்சியமளிக்க கோட்டாபய ராஜபக்ஷ முற்படுவார் என்று அவரது சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் ஜூன் 21ஆம் திகதி முன்னிலையாகிச் சாட்சியமளிக்குமாறு கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அழைப்பாணை கிடைத்துள்ளதாகத் தெரிவித்துள்ள சட்டத்தரணிகள், வழக்குக் கோவை முழுமையாகப் படித்து வருவதாகவும் கூறியுள்ளனர்.

2011ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் யாழ். நகரில் நடைபெற விருந்தகாணாமல்ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டத்தை ஒழுங்கமைப்பதில் ஈடுபட்டிருந்த மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களான லலித் குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் ஆவரங்காலில் வைத்துக் காணாமல் ஆக்கப்பட்டனர்.

இதுதொடர்பாக அவர்களின் உறவினர்களால் 2012ஆம் ஆண்டு கொழும்பு மேன்முறையீட்டுநீதிமன்றில் ஆள்கொணர்வு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு மீதான விசாணையின்போது, இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட சாட்சிகளை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றுக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனையடுத்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் 2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் 19ஆம் திகதி விசாரணைகள் ஆரம்பமாகின. ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித்குமார, குகன் முருகானந்தனின் மனைவி, லலித்குமார் வீரராஜின் தந்தையார் ஆகியோர் ஆரம்பத்தில் சாட்சியமளித்திருந்தனர். தொடர்ந்து முன்னாள் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல உள்ளிட்ட சிலர் சாட்சியமளித்திருந்தனர்.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் அந்தோனி சாமு பீற்றர் போல் முன்னிலையில் கடந்த 3ஆம் திகதி விளக்கத்துக்கு வந்தது.

இதன்போது சாட்சியம் வழங்குவதற்காக அழைக்கப்பட்ட முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ மன்றில் முன்னிலையாகவில்லை. அவர் சார்பில் சட்டத்தரணி அமரசிங்க முற்பட்டார்.

சாட்சி நேரில் மன்றில் முன்னிலையாக முடியவில்லை. அவர் மன்றால் தீர்மானிக்கப்பட்ட அடுத்த தவணையில் முற்பட்டு சாட்சியமளிப்பார் என்று சட்டத் தரணி கூறினார்.

அதனால் வழக்கு விசாரணையை எதிர்வரும் ஜூன் 21ஆம் திகதிவரை ஒத்திவைத்து நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)

ரிஷாத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவிலுள்ள ரெலோ தலைமையகத்தில் நேற்று கட்சியின் தலைமைக்குழுக் கூட்டம் நடந்தது. இதன் போதே மேற்படி விடயம் சம்பந்தமாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ரெலோதலைமைக்குழுஉறுப்பினர்கள் 24 பேரில் நேற்றைய கூட்டத்தில் பதினொரு பேர் கலந்து கொண்டனர். செல்வம் அடைக்கலம், என்.சிறிகாந்தா, எம்.கே. சிவாஜிலிங்கம், கோவிந்தன் கருணாகரம், இந்திரகுமார் பிரசன்னா, விந்தன் கனகரட்ணம், அஞ்சலா, நித்தியானந்தம், வினோநோகராதலிங்கம், குரூஸ், சுரேன் ஆகியோரே கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பில் ரெலோ செயலாளர் நாயகம் என். சிறீகாந்தா தெரிவித்தவை வருமாறு :-

நடந்து முடிந்த மோசமான சம்பவங்கள் தொடர்பில் அமைசர் ரிஷாத் மற்றும் ஹிஸ்புல்லா மீது நாடு முழுவதிலுமிருந்து பரவலாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவ்விடயத்தில் நீதியான விசாரணை நடைபெற வேண்டுமானால் பதவியில் இருந்து இருவரும் விலகி விசாரணைக்கு முழு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும்

ஜ.எஸ். அமைப்பின் பின்னணியில் நடத்தப்பட்ட தாக்குதலுடன் தொடர்புடைய பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் அரசியல்வாதிகளின் பின்னணியுடையவர்கள் என்ற குற்றச்சாட்டு பரவலாக உள்ளது. சந்தேகநபர்களை விடுவிக்க முயற்சித்தனர் என இராணுவத்தளபதியும் கூடப் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், ரிஷாத் பதியுதீன், ஹிஸ்புல்லா ஆகியோர் தமது பதவிகளைத் துறந்து நீதி விசாரணையை எதிர்கொள்ள வேண்டும். அதை அவர்கள் செய்யாவிட்டால் அரசாங்கம் அவர்களை பதவிவிலக்க வேண்டும். அதையும்செய்யாமல், நம்பிக்கையில்லா பிரேரணையை எதிர் கொள்வதென ரிஷாத் பதியுதீன் முடிவெடுத்தால், நம்பிக்கையில்லா பிரேரணையை ரெலோவின் இரண்டு எம்.பிக்களும் ஆதரித்து வாக்களிப்பதென முடிவெடுக்கப்பட்டது. - என்றார் சிறீகாந்தா.

நேற்றைய ரெலோ கலந்துரையாடலின் பின்னர், பத்திரிகையாளர் சந்திப்புநடத்திகட்சியின் தீர்மானம் அறிவிக்கப்பட்டது.

முதியவரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இரணைமடுப் பகுதியைச் சேர்ந்த இராசேந்திரம் (வயது-62) இவ்வாறு உயிரிழந்தவராவர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த இரவு நேரத்தபால் இரயிலேயே இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உடலின் மேற்பகுதி வேறாகவும், இடுப்புக்கு கீழ் பகுதி வேறாகவும் காணப்பட்டது. இந்நிலையில் ரயில் பயணம் தாமதமடைந்ததுடன் சடலத்தை மீட்ட ரயில்வே அதிகாரிக்கள் சடலத்தை அடுத்த ரயில் நிலையத்தில் ஒப்படைத்துச் சென்றனர். (ஐ)

மறவன்புலவுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நேற்று முற்பகல் 10.00 மணிக்கு மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயத்துக்கு முன்னாள் ஒன்றுதிரண்ட மக்கள் சுலோகங்களை ஏந்தியவாறு காற்றாலை அமைக்கப்படும் இடம் வரை ஊர்வலமாகச் சென்றனர்.

இதன்போது அங்கு இலங்கை மின்சார சபையின் காற்றாலை மின் உற்பத்திப் பிரிவினரால் மறவன்புலவு தொடக்கம் நாவற்குழி வரையிலான கடற்கரை வீதி புனரமைப்புப் பணிகள் இடம்பெற்றுக்கொண்டிருந்தன.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பணிகளை இடைநிறுத்திவாகனங்களையும் இயந்திரங்களையும் அகற்றுமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில் அந்த இடத்துக்கு வருகை தந்த சாவக்சேரிப் பொலிஸார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களுடனும் காற்றாலை பொறியியலாளருடனும் பேச்சில் ஈடுபட்னர். இதன்போதுகாற்றாலை அமைப்பதால் தமது இயற்கை வளம் பாதிக்கப்படுகின்றது. காற்றாலை அமைக்கும் இடங்களில் மரங்கள் தறிக்கப்படுகின்ற போது மாற்றீடாகப் புதிய மரங்கள் நடப்படுவதில்லை எனவும், காற்றாலை மின் உற்பத்தி தொடர்பாக அப்பகுதி மக்களுக்கு உரிய தெளிவுபடுத்தல் வழங்கப்படவில்லை எனவும், பிரதேச சபையின் உரிய அனுமதி பெறப்படாமல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் குற்றஞ்சாட்டினர்.

இதன்போது காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தின் பொறியியலாளர் பொலிஸாருக்கு விளக்கமளிக்கையில் -

இந்த வேலைத்திட்டம் அரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு அனைத்துமட்ட அனுமதிகளும் பெறப்பட்டு மேற்கொள்ளப்படுகின்றது. மக்கள் கோரிக்கைவிடுப்பது போல் இயற்கை வளம் பாதிக்கப்படாதவாறு இந்த வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படும். காற்றாலை அமைப்பதற்கு அதனோடு தொடர்புபட்ட அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் வழங்கிய அனுமதிக் கடிதங்களை வழங்கியுள்ளன - என்றார்.

அந்த ஆவணங்களையும் அவர் பொலிஸாருக்குக் காண்பித்தார்.

இரண்டு தரப்புக்களுடனும் கலந்துரையாடிய பொலிஸார், இன்று தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இரண்டு தரப்பினரையும்அழைத்துகலந்துரையாடுவதுஎனமுடிவெடுத்தனர். இதற்கு அனைவரும் ஒப்புக்கொண்டதையடுத்து போராட்டம் முடிவுறுத்தப்பட்டது. (ஐ)

நல்லூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத்தூதரகம் மற்றும் யாழ். மாவட்ட சங்கிலிய மன்னன் அறக்கொடை நிலையத்தின் ஏற்பாட்டில் நடந்த இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக இந்திய உதவித்தூதுவர் சங்கர் பாலசந்திரன், யாழ். மாநகர சபை முதல்வர் இமானுவேல் ஆனோல்ட் மற்றும் சென்னை இலக்கிய புராண கலைநிலை போராசிரியர் தங்கவேல் குமராசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், அறிஞர்கள், சான்றோர்கள், கல்வியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

செம்மலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் அங்கு அடாத்தாக விகாரை அமைத்துள்ள பிக்கு ஆகியோர் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் பல நூறாண்டுகளாகப் பழைய செம்மலைக் கிராம மக்கள் வழிபட்டு வந்தனர். போருக்குப் பின்னர் ஆலய வளாகத்தில் பௌத்த பிக்கு ஒருவர் குடியேறி குருகந்த ரஜமகா விகாரை எனும் பெயரில் விகாரை ஒன்றை அமைத்து அங்கு பெரியளவிலான புத்தர் சிலை ஒன்றையும் வைத்துள்ளார்.

பிக்குவின் அத்துமீறலையடுத்து கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அந்தப் பகுதியில் இரு தரப்புகளுக்கும் இடையில் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக இந்த விவகாரம் தொடர்பில் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அதுதொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று இம்மாதம் 6ஆம் திகதி முல்லைத்தீவு நீதிமன்றினால் தீர்ப்பு வழங்கப்பட்டது .

இரண்டுதரப்பும் அந்தப்பகுதியில்உள்ள ஆலயங்களில்தடையின்றிச் சுதந்திரமாக வழிபாடுகளை மேற்கொள்ளலாம். நீராவடிப்பிள்ளையார் ஆலயத்துக்கு வழிபாட்டுக்குச் செல்பவர்களுக்குப் பௌத்த பிக்கு இடையூறு ஏற்படுத்தக்கூடாது. இரண்டு தரப்பும் இந்த ஆலயங்களில் அபிவிருத்தி வேலைகளைச் செய்வதாக இருந்தால்உள்ளூர்த் திணைக்களங்களின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டுஉரிய அனுமதிகளைப் பெற்று மேற்கொள்ள வேண்டும்.

ஏற்கனவேநீராவியடிபிள்ளையார் ஆலயம் எனப் பெயர் சூட்டப்பட்டிருந்த பெயர்ப் பலகையை நீக்கி பௌத்த பிக்கு கணதேவி தேவாலயம் எனப்பெயர்ப்பலகை நாட்டியிருந்தார். அதனை மாற்றி மீண்டும் நீராவியடிப் பிள்ளையார் ஆலயம் என எழுதி மன்றுக்குப் பொலிஸாரை நீதிமன்று அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும். இந்த உத்தரவை மீறினால் தண்டனைக்கு உட்படுத்தப்படுவீர்கள் என்று முல்லைத்தீவு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்த நிலையில் நேற்று நீராவியடிபிள்ளையார் ஆலயத்தைச் சேர்ந்த நிர்வாகத்தினரும் அடியவர்களும் உரிய உள்ளூர் திணைக்களங்களான வீதி அபிவிருத்தி அதிகார சபை , கரை துறைபற்று பிரதேச சபை ஆகிய வற்றினதும் அனுமதிகளுடன் நீதிமன்றின் தீர்ப்புக்கு உட்பட்டுப் பிள்ளையார் ஆலயத்தின் இரு மருங்கிலும் நீராவியடி பிள்ளையார் ஆலயம் எனும் பெயர்ப் பலகையை நாட்டச் சென்றனர். இதன்போது பௌத்த பிக்குவாலும் விகாரைக்குப் பாதுகாப்புக்கு அமர்த்தப்பட்டுள்ளபொலிஸ் உத்தியோகத்தராலும் அவர்கள் தடுக்கப்பட்டனர் .

உடனடியாக பௌத்த பிக்குவால் பொலிஸாருக்கும் ,சிறப்பு அதிரடிப்படையினருக்கும்முறைப்பாடு வழங்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் பௌத்த பிக்குக்குச் சார்பாகச் செயற்பட்டு ஆலயத்தில் வழிபாட்டுக்காகவும், நீதிமன்றின் உத்தரவை மதித்து பெயர்ப் பலகை நாட்ட வந்த செம்மலை கிராம மக்களை நிலத்தில் அமர்த்தி அனைவரினது பெயர், அடையாள அட்டை இலக்கம் என்பனவற்றையும் பதிந்ததோடு மிக நீண்டநேரம் விசாரணைகளிலும் ஈடுபடுத்தினர்.

செய்திசேகரிப்புக்காகச்சென்ற ஊடகவியலாளரை ஒளிப்படம் எடுக்கவேண்டாம் எனக் கூறியதுடன் ஊடகவியலாளர் என அடையாளப்படுத்திய பின்பும் பொலிஸார் வேண்டும் என்றே ஊடகவியலாளரின் அடையாள அட்டையை வாங்கிப் பதிவுகளை மேற்கொண்டதோடு ஒளிப்படம் எடுத்தும் அச்சுறுத்தல் விடுத்திருந்தனர் .

பிள்ளையார் ஆலயத்துக்கு நேர் எதிராக உள்ள இராணுவ முகாமுக்கு அருகாக வீதியின் அருகில் புதிய காவலரண் ஒன்று அமைக்கப்பட்டு அங்கே ஆயுதம் தாங்கிய படையினர் 24 மணி நேரமும் காவலில் அமர்த்தப்பட்டுள்ளனர். பௌத்த மத கொடிகளும் வெசாக் கூடுகளும் வேண்டும் பிள்ளையார் ஆலயத்துக்குள்ளும் கட்டப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிந்தது. (ஐ)

பாதாள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யொன்று ஏற்படுத்தப்பட்டிருப்பதை நேற்று இராணுவமும், விசேட அதிரடிப்படையினரும், பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது கண்டுபிடித்துள்ளனர்.

இந்த வீட்டின் உரிமையாளர் இதற்கு முன்னர் பல்வேறு பாதாள உலக சம்பவங்களுக்காக நீதிமன்றத்தினால் தண்டனை அனுபவித்த ஒருவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலக்கீழ் பதுங்கு அறை விசாலமான இட்பரப்புடன்அமைக்கப்பட்டுள்ளதுடன், ஒட்சிசன் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவும் காணப்படுவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

ஏதாவது, தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றால், வீட்டிலுள்ள மனைவியும், பிள்ளைகளும் பாதுகாப்பாக இருப்பதற்கு இந்த அறை அமைக்கப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்த வீடு சட்டவிரோதமான ஏதாவது நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பது குறித்துப்பொலிஸார்விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதுதவிர, வெலிபன்ன பிரதேசத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது கத்தி, போலியான வாகன இலக்கத் தகடுகள் என்பன மீட்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

ரிஷாத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு பொலிஸ் தலைமையகம் அறிவுறுத்தியுள்ளது.

இந்தத் தகவலை பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் ஏ.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா இருவருக்கும் எதிராகப் பொலிஸ் தலைமையகத்துக்கு இரண்டு முறைப்பாடுகள் கிடைத்தன. அவை தொடர்பில் விசாரணை நடத்துமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

உயிர்த்தஞாயிறுதினத்தன்று நாட்டில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்திய வர்களுடன் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா ஆகிய இருவருக்கும் தொடர்புகள் இருந்தன என்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

எனினும் அவர்களுடன் பதவி நிலையைக் கருத்திற்கொண்டு பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தாத நிலையில் அவர்களுக்கு எதிராக இரண்டு முறைப்பாடுகள் பொலிஸ் தலைமையகத்துக்கு வழங்கப்பட்டுள்ளன.

அவை தொடர்பில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா ஆகிய இருவரிடமும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணை நடத்த உள்ளது. (ஐ)

தொல்பொருள் திணைக்களம் மீண்டும் வன்முறைக்கு தூபம்!

மனோ கணேசன் எச்சரிக்கை

கொழும்பு, மே 28

தொல்பொருள் திணைக்களத்தின் மூலம் திருகோணமலை மாவட்டத்தில் காணப்படும் தமிழ் இந்துக்களின் பாரம்பரிய மத, இன உரிமைகள் கபடத்தனமாகப் பறிக்கப்படுகின்றமை நிரூபண மாகியுள்ளது என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கிண்ணியா, இந்துக்கோவிலை உடைத்து, அங்குவிகாரை ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் முயற்சிகள் தொடர்பில் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்

கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தொல்பொருள் திணைக்களத்தின் ஊடாக, திருகோணமலை வாழ், தமிழ் இந்துக்களின் பாரம்பரிய மத, இன உரிமைகள் கபடத்தனமாக பறிக்கப்படுகின்றன.

வடக்கு – கிழக்கில் இந்து கோயில்களை எல்லாம் அடையாளப்படுத்தி பட்டியல்படுத்தி அதனைப் பாதுகாக்கப்போகின்றோம் என்று கூறி, அவற்றை மறைமுகமாகச் சிங்கள பௌத்த சின்னங்களாக காட்டக்கூடிய இலக்கிலேயே இந்தத் திணைக்களம் செயற்படுகின்றது. இது நாட்டிலே மீண்டும் ஒருமுறை வன்முறையை, பிரச்சினையை உருவாக்கும் செயற்பாடாகவே அமைகின்றது – என்றார். (ஐ)

காத்தான்குடியில் ஐ.எஸ்.: 63 பேர் வசமாக சிக்கினர்!

மட்டக்களப்பு, மே 28

மட்டக்களப்பு மாவட்டம், காத்தான்குடிப் பிரதேசத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இதுவரை 63 பேர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் வழி நடத்தலில் உயிர்த்த ஞாயிறன்று இலங்கையில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரி காத்தான்குடியைச் சேர்ந்த சஹ்ரான் ஹாசீம் எனப் பொலிஸார் அடையாளம் கண்டனர். அதையடுத்து காத்தான்குடி முழுவதும் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கைகளின்போது கடந்த ஒரு மாத காலத்தில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பேரில் 63 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று காத்தான்குடிப் பொலிஸார் கூறினர்.

இவர்களில் பலர் ஆயுதங்களுடன் கைதுசெய்யப்பட்டனர் என்றும் காத்தான்குடிப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, காத்தான்குடிப் பிரதேசத்தில் பாதுகாப்புத் தரப்பினர் தொடர் சுற்றிவளைப்புத் தேடுதல்களை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

கைவிடப்பட்ட வீடொன்றை சுற்றிவளைத்தது ராணுவம்

தமிழர் புனர்வாழ்வுக் கழக ஆவணங்கள் சில மீட்பு

வவுனியா, மே 28

வவுனியா – மரக்காரம்பளையிலுள்ள கைவிடப்பட்ட வீடுஒன்று படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு நேற்றுக் காலை சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் இலச்சினை பொறிக்கப்பட்ட சில பொருள்கள், ஆவணங்கள் என்பன மீட்கப்பட்டன.

இராணுவத்தினர் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் இணைந்து மரக்காரம்பளையிலுள்ள பாவனையற்ற கைவிடப்பட்ட வீடு ஒன்றில் நீதிமன்ற அனுமதியுடன் சோதனை நடவடிக்கை முன்னெடுத்தனர்.

அங்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சில ஆவணங்கள், மோட்டார் சைக்கிள் இலக்கத் தகடு என்பன மீட்கப்பட்டன.

இது குறித்து மேலதிக விசாரணைகளை பொலிஸாரும் புலனாய்வுப் பிரிவினரும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.



குருநாகல் டாக்டரை விசாரிக்க விசேட குழு

கொழும்பு, மே 28

குருநாகலில் கைது செய்யப்பட்ட வைத்தியர் சேகு சிஹாப்தீன் சாபி தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு விசேட குழு ஒன்று அமைக்கப்படும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன அறிவித்துள்ளார்.

விரைவில் குழு அமைக்கப்பட்டு விசாரணை தொடரும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முல்லைத்தீவில் பிடிபடும் முதலைகளை வவுனிக்குளத்தில் விட மக்கள் எதிர்ப்பு!

முல்லைத்தீவு, மே 28

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பிடிக்கப்படும் முதலைகளை வவுனிக்குளத்தில் விடும் செயற்பாட்டுக்கு மீனவர்களும் பிரதேச மக்களும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு – கேப்பாபிலவு பகுதியிலுள்ள இராணுவமுகாமுக்குள் புகுந்த முதலைகள், வனஜீவராசிகள் திணைக்களத்தினால் பிடிக்கப்பட்டு வவுனிக்குளத்தில் விடுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு – மாந்தை, கிழக்கு துணுக்காய் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் வாழும் விவசாயிகளுக்கான நீர் விநியோகத்தை வழங்கும் ஒரு குளமாகவும் அதேவேளை நூற்றுக்கும் மேற்பட்ட நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்களின் வாழ்வாதாரத் தொழில் மையமாகவும் வவுனிக்குளம் அமைந்துள்ளதுடன், பயிர்ச் செய்கை காலங்களில் குளத்தின் அலை கரைப்பகுதி, கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகளாகவும் பயன்படுகின்றது.

இந்நிலையில் குளத்தில் காணப்படும் முதலைப் பெருக்கத்தினால் வலைகள் சேதமாக்கப்படுவதுடன், தமது தொழில்களும் பாதிக்கப்படுகின்றன என மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

குளத்தை அண்மித்த பகுதிகளில் மேய்ச்சலுக்காக விடப்படும், குளத்துக்கு நீர் தேடிச் செல்லும் கால்நடைகளை முதலைகள் இரையாக உட்கொள்கின்றன என்றும் மக்கள் கவலை வெளியிட்டனர். இவ்வாறு மீனவர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய முதலைகளை இந்தக் குளத்தில் விடுவது தொடர்பில் அந்தப் பிரதேச மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

பௌத்த தேசியவாதம் முதலில் தோற்கடிக்கப்படுதல் அவசியம்

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், மே 28

சிங்கள, பௌத்த தேசியவாதமென்பது இலங்கைத் தீவில் வாழ்கின்ற மக்களை ஒன்றுக்கொன்று முரண்பட வைத்துத் தன்னையே அழித்துக்கொள்கின்றதொரு சித்தாந்தம். இப்படியான சித்தாந்தத்தைக் கொண்ட தேசியவாதத்துக்கு ஒரு தெளிவான கொள்கை இருக்கப் போவதில்லை. இதனால் தான் அவ்வாறான சித்தாந்தம் இந்த ஒட்டுமொத்தத் தீவையும் அழிவுப் பாதை நோக்கிக் கொண்டு சென்று கொண்டிருக்கிறதென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

இலங்கை அரசென்பது மிகவும் ஊழலுக்கு உட்படுத்தப்பட்ட, காசுக்கு எதுவும் செய்யக் கூடிய தோற்றுப் போனதொரு அரசு. அரசை மாற்றினால் அடிப்படையில் ஒட்டுமொத்த அரசின் அல்லது நாட்டின் கொள்கையை மாற்றியமைக்கக்கூடும். ஒரு அரசியல்வாதியை வேண்டிக் கொண்டால் இந்த நாட்டினுடைய அடிப்படை நிலைப்பாடுகளைத் தலைகீழாக மாற்றலாம் என்றளவுக்கு ஊழல் மோசடியில் மூழ்கிப் போயுள்ளதொரு அரசு. அப்படிப்பட்ட அரசுக்குத் தெளிவானதொரு கொள்கை இருக்கப் போவதில்லை.

முன்னர் சிங்களத் தேசிய வாதத்துக்குத் தமிழரின் உரிமைப் போராட்டம் மிகப் பெரும் அச்சுறுத்தலாக விருந்தது. இனவாதத்தின் அடிப்படையில் ஒட்டுமொத்த இலங்கைத் தீவும் சிங்கள பௌத்தர்களுக்கே உரித்தானது என்ற சித்தாந்தத்துக்குச் சவால் விடும் வகையில் தமிழர்களுடைய உரிமைப் போராட்டம் அமைந்திருந்தது. இதனால் தான் தமிழர்களுடைய உரிமைப் போராட்டத்துக்குப் பயங்கரவாதம் என்ற முத்திரை குத்தி இனப்படுகொலை மூலம் அந்தப் போராட்டத்தை மௌனிக்க வைத்தார்கள்.

கடந்த உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இலங்கையில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் தான் உண்மையான பயங்கரவாதம். கொள்கை எதுவுமில்லாமல் வெறுமனே அழிவுகளை மட்டும் ஏற்படுத்தும் நோக்குடன் செயற்படுத்தப்படுபவற்றைத் தான் பயங்கரவாதமெனக் கருத முடியும். ஈவிரக்கமற்ற வகையில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இவ்வாறான பயங்கரவாதத்திற்கெதிராக எடுக்கின்ற நடவடிக்கை ஒட்டுமொத்தமாக முஸ்லிம் இனத்தையே அழிக்கும் வகையிலுள்ளது. இவ்வாறான நடவடிக்கையை நியாயப்படுத்துவதற்குத் தற்போது அச்சுறுத்தலில்லாத தமிழர்களுடைய உரிமைப் போராட்டத்தைக் காரணம் காட்டுகிறார்கள்.

எனினும், உரிமைப் போராட்டத்திற்காக உயிரிழந்த பொதுமக்கள், போராளிகள் அனைவரையும் நினைவு கூருகின்ற நாளை இனப்படுகொலைதினமாக அனுஷ்டிப்பதன் மூலம் தங்களுக்கு ஏற்படவிருக்கும் கெட்ட பெயரை இல்லாமல் செய்ய வேண்டுமென்பதற்காக மாணவர்களைக் கைது செய்தார்கள்.

எனவே, நியாயங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்ட வகையில் அமைவதாகத் தெரிந்தாலும் கூட இறுதியில் அவர்களுடைய நலன்கள் மாத்திரம் தான் பேணப்படுகின்றன.

எங்களைப் பொறுத்தவரை இங்குள்ள சிங்கள, பௌத்த மக்களைத் தவிர இங்குள்ள அனைத்து மக்களுக்கும் சிங்கள பௌத்த தேசியவாதம் தான் பிரச்சினையாகவுள்ளது. இந்தச் சித்தாந்தத்தை நாமனைவரும் இணைந்து முற்றுமுழுதாகத் தோற்கடிக்க வேண்டும். இதனைத் தோற்கடிக்காமல் இலங்கைத் தீவில் நிரந்தர சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த முடியாது – என்றார். (ஐ–07)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி அவர்களது அச்சகத்தில் 28.05.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.